தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰	மலர்
	விளம்பி, மாசி	
௩௪	1959 பிப்ரவரி, மார்ச்சு.	௧௧

தமிழில் தாவரம்

கு. சீனிவாசன், M. Sc.,

(தாவர விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.)

குறிஞ்சி

தமிழ் நிலம் மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி என நான்கு வகைப்படும். முல்லையுங் குறிஞ்சியும் தம்மியல் திரிந்து இயைந்த நிலத்தைப் பாலை என்பர். குறிஞ்சி நிலமென்பது மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகும். மற்று குறிஞ்சி ஒழுக்கமாவது புணர்தலும் புணர்தல் நிமித்தமும் பற்றியது. இம்மலைப் பாங்கில் வளரும் குறிஞ்சிச் செடியை நோக்கி இந்நிலத்தைக் குறிஞ்சி நிலம் என்றனர்போலும். இக்கருத்து, பழந்தமிழ் உரையில் நிலவியுள்ளது. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் இக்குறிஞ்சிச் செடி, இதன் பெயரால் அமைந்த நிலம், பண், ஒழுக்கம் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

நெடுங்குன்றத்து,

கருங்காற் குறிஞ்சி மதனில் வான்பூ
ஓவுக் கண்டன்ன இல்வரை இழைத்த
நாறு கொள் பிரசம் ஊறு நாடற்கு — நற்றிணை—268

நீள்மலை கலித்த பெருங்கோற் குறிஞ்சி
நாள் மலர் புரையும் மேனி — நற்றிணை—301

ஏகல் அடுக்கத்து இருள்முகை யிருந்த
குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர் — நற்—116

சாரல்

கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந் தேனிழைக்கும் நாடனெடு நட்பே — குறுந்—3

குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர் — பரிபா—67

கொடிச்சி

பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட — அகம்—102
கருங்கோற் குறிஞ்சி அடுக்கம் பாட — புறம்—374
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி — திருமுருகு—239
விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ — திருமுருகு—267
குறிஞ்சிக் கோமான் — சிறுபாண்—267

குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மால் புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரல் எறிகுறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத்து ஓர்க்கும்
புல்லார் வியன் புலம் போகி பெரும்பா—181

கருங்காற் குறிஞ்சி சான்றவெற் பணிந்து மதுரைக்கா—300

கார்மலர் குறிஞ்சி சூடிக்கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணி மதுரைக்கா—613
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி குறிஞ்சிப்—63
வள்ளிதழ்க் குவளையுங் குறிஞ்சியுங் குழைய மலைபடு—334
இன்குரல் விறலியர்
நடுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி மலைபடு—359

நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து
சிலம்பு-மதுரை-ஊர்காண்—89

குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின்
சிலம்பு-வஞ்சி-குன்றக்குரவை—18

சேணோங்கு இதணத்துக்
குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்
சிலம்பு-வஞ்சி-நீர்ப்படை—224

இவற்றால் யாம் அறியக்கூடியவை ஒருசில. மைவரை உலக மாகிய குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். நல்லியக்கோடனைக் குறிஞ்சிக் கோமான் என நத்தத்தனார் விளிக்கின்றார். மலைப்பாங்கில் குறிஞ்சி வளரும். கார்காலத்தில் பூக்கும் அதன் தண்டு கருமையானது. வன்மையானது எனினும் ஆம். பூக்காம்பு வலியற்றது பூ நறுமண முடையது. இதனை மகளிர் சூடிக் கொள்வர். பூத்த குறிஞ்சியடுக் கத்தைப் புகழ்ந்து பாடுதல் உண்டு. இப்பூக்களிலிருந்து தேனீ பெருந்தேன் இழைக்கும். விறலியர், கொடிச்சி முதலியோர் குறிஞ்சிப் பண் பாடுவது உண்டு. இன்னோரன்ன நந்தமிழில் காணக்கிடக் கின்றன.

குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை பூக்கும் என்ற கருத்து தமிழ்நாட்டில் நிலவி வருகின்றது தமிழ்ச்சான்றோர் அளவிகந்து புனைந்துரையார் என்பது உண்மை. குறிஞ்சிப்பூ நன்றாகப் பூத்துள்ள நாளில் மலைமுழுதும் அழகொழுகும் நல்ல நீலமாகக் காணப்படும். நீலமலை இதனாற்றான் இப்பெயர் பெற்றதென்னலாம். அங்கு வளரும் யூகலிப்டஸ் (Eucalyptus) மரத்தை 'புளூ கம்' (Blue gum) என்றழைப்பர். இதன் பெயரால் நீலமலை இப்பெயர் பெற்ற தென்பது பொருந்தாது. இது நீலமலையில் தொன்று தொட்டு வளர்ந்து வரும் மரமன்று. இது குறிஞ்சி பூக்கும் நீலமலையில் அண்மையில் பயிரிடப்பட்டது.

குறிஞ்சி ஒன்று முதல் மூன்றடி உயரம் வரை அடர்ந்து வளரும் புதராகும். இதனைத் தாவர நூலார் ஸ்ரொபிலாந்தஸ் குந்தியானஸ் (Strobilanthes Kunthianus) என்பர். இது அக்காந்தேசி (Acanthaceae) என்னும் தாவரக் குடும்பத்தின்பாற் படும். நாக மல்லிகை, நீர்முள்ளி, ஆடாதொடை, கோபுரந்தாங்கி முதலிய செடிகள் இக்குடும்பத்தைச் சார்ந்தவை. பல்லாண்டுகள் வளர்ந்து முற்றுதலின், குறிஞ்சியின் தண்டு மிக வன்மையுடையதாக இருக்கும். ஆதலின் "கருங்கோற் குறிஞ்சி" என்று இதனை அடுத்தடுத்துச் சிறப்பித்துக் கூறுதல் பொருந்துவதாகும். மற்று, இச் செடியின் தண்டு கருநிறமாக இருப்பதும் கருதற்பாலது. ஸ்ரொபிலாந்தஸ் எனப்படும் இவ்வினத்தில் இதுகாறும் நூற்றுத் தொண்ணூற்றிரண்டு வகை குறிக்கப் பெற்றுள. இவற்றுள் ஆசியாக் கண்டத்தில் நூற்றெண்பதும் இந்திய நாட்டில் மட்டும் நூற்றைம்பத்துநான்கும் (Hooker, Vol. IV - 434) தண்டமிழ் நாட்டில் நாற்பத்தாறும் (Gamble) உள்ளன. நீலமலையிலும் கோடைக்கானல், பழநிமலைகளிலும் வளரும் ஸ்ரொபிலாந்தஸ் இனத்தைச் (Genus) சார்ந்த பத்தொன்பது வகைச்செடிகளில் பல, நான்கு முதல் பதினைந்து ஆண்டுகட்கு ஒருமுறை பூத்து அழியும் இயல்பின. (Fyson) இவற்றுள் குறிஞ்சியை முதன்முதலாக ஆண்டர்ஸ் (T. Anders) என்பவர் ஸ்ரொபிலாந்தஸ் குந்தியானஸ் என்ற வகைப் பெயரிட்டார். ஆகலின், குறிஞ்சியைத் தாவரநூலில் குறிக்குங்கால் இவரது பெயரையுஞ் சேர்த்து Strobilanthes Kunthianus, T. Anders, என்று எழுதுவது மரபு. இவ்வினத்தின் பிற வகைகள் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. பூக்காத நிலையில் குறிஞ்சியை இவற்றினின்றும் பிரித்தறிதல் அத்துணை எளிதன்று. வேறு வகைகளின் பூவெல்லாம் வெள்ளியதாகவும் வெண்மைகலந்த நீலமாகவும் ஊதா நிறமாகவும் இருக்கும். ஸ்ரொபிலாந்தஸ் செடிகள் பெரும்பாலும் மூவாயிரம் அடி உயரத்திற்குமேல் வளரும் இயல்பின. லஷிங்டன் (Lushington) என்பவர் தமது தாவரப்பெயர்நூலில் ஸ்ரொபிலாந்தஸ் கான்சாங்குனேயஸ் (Strobilanthes Consanguineus, C. B. Clarke) என்பதைப் பெருங்குறிஞ்சி எனவும் ஸ்ரொபிலாந்தஸ் சிலியேடஸ் (Strobilanthes ciliatus, Nees.,) என்பதைச் சிறுகுறிஞ்சி எனவும் ஸ்ரொபிலாந்தஸ் குந்தியானஸ் என்பதைக் குறிஞ்சி எனவும் கூறுகின்றார். S. கான்சாங்குனேயஸ் வெள்ளிய அல்லது நீலப் பூக்களை, பன்னிராண்டுகட்கு ஒருமுறை விரியப் பூக்கும் இயல்பிற்று. மேற்குறித்த "மதனில் வான்பூ" என்ற நற்றிணைத் தொடருக்கு, வலிமையில்லாத வெளிய பூ எனப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை கூறுகின்றார். வலிமையில்லாத வான்போன்ற நீலப்பூ என உரை கொள்வது நன்று. "குறிஞ்சி நாள் மலர் புரையும் மேனி" என்ற மற்றொரு நற்றிணை, குறிஞ்சிப்பூவின் நிறத்தை ஒத்தமேனியள் என்று தலைவியைக் குறிக்கின்றபடியால், வான்பூ என்றது நீல நிறத்தைக் குறித்தல் கூடும்.

S. குந்தியானஸ் எனும் குறிஞ்சி 1898, 1910 ஆகிய ஆண்டுகளில் பழநிமலைப் புறத்தும் 1887, 1899, 1910, 1916 ஆகிய ஆண்டுகளில் நீலமலையிலும் பூத்திருந்ததாக பைசன் (Fyson) என்பவர் குறிப்பிடுகின்றார். 1956-ஆம் ஆண்டில் மைசூரிலிருந்து நீலமலைக்கு யான் தாவர மாணவர்களுடன் வருங்கால் S. குந்தியானஸ் ஆகிய குறிஞ்சி நன்றாகப் பூத்திருந்தது மலைப்பாங்கெல்லாம் ஒரே நீலமாக விளங்கியது கண்டு மகிழ்ந்தோம். இவ்வாண்டில் (1958) அதேவழியில் வரும்போது ஒரு குறிஞ்சிப் பூவைக்கூடக் காணவில்லை. எனினும் தொட்டபெட்டா எனும் மலையுச்சிக்குப் போகும் வழியில் சற்றேறக்குறைய எண்ணாயிரம் அடி உயரத்திற்குமேல் S. கஸ்பிடேடஸ் (S. cuspidatus) பூத்திருந்தது. சிறிது வெண்மை கலந்த நீலமான இப்பூ குறிஞ்சிப்பூவன்று. இவ்வாண்டில் கொடைக்கானல் மலையிடத்தே குறிஞ்சி பூத்ததாகக் கூறுப. அது S. குந்தியானஸ் ஆகிய குறிஞ்சிதானா என்பது புலனாகவில்லை.* குறிஞ்சி பூத்த ஆண்டில் மலைநாட்டு மக்கள் தம் நல்வாழ்வு குறித்து யாதானும் ஒரு திசையில் ஊர்ப்புறஞ் சென்று காட்டைக் காவலர் (Kattai-kavalar) எனும் சிறு தெய்வத்திற்கு வழிபாடு செய்வர் என்றும் அங்ஙனம் செய்யாவழி தமது மாடு கன்று முதலியன இறந்தொழிவதுடன் பயிர் விளைவு குன்றுமெனவும் கோடைக்கானல் பாங்குறையும் மக்கள் கூறுவதாக S. சீத்தாராமையா (Indian Antiquary - Vol XL - 1911-68) எழுதியுள்ளார்.

இலை, பூங்கோல், பூ இவைகளின் அமைப்பிலும் குறிஞ்சி இவ்வகைச் செடிகளினின்றும் வேறுபடும். குறிஞ்சியின் இலையடியும் இலைநுனியும் குறுகி இருக்கும். இலை நரம்புகள் இலையின் கீழ்த் தடித்துத் தோன்றும். விளிம்பு அரிவாள் பற்களை ஒத்திருக்கும். பூவின் புறவிதழ் (Sepals) ஐந்தும் நன்கு பிளந்திருக்கும். அகவிதழ் (Petals) ஐந்தும் நன்கு இணைந்து சற்றேறக்குறைய ஓரங்குல நீளமும் நீலநிறமும் உடையதாக விரியும். தாதுக்கால் இரண்டும் (Stamens) நல்ல மணமுள்ள மகரந்தம் (Pollen) தாங்கி நிற்கும். கொங்கு தேரும் வாழ்க்கையையுடைய அஞ்சிறைத்தும்பி மலருழக்கித் தேனிழைத்தற் பொருட்டு முசலி (Ovary) அருகே தேன்சுரப்பிகள் உள்ளன. ஆறுமுதல் பன்னீராண்டுகட்கு ஒருமுறை பூக்கும். இதன் தேன் நல்ல மணமும் மிக்க இனிப்பும் உடையது. இதுபோல் இனிய குறுந்தொகை ஒன்றைத் தேவகுலத்தார் யாத்துள்ளார் "பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே" என்புழி தேனீ தோன்றா எழுவாயாக நிற்பது போலப் பால்வரை தெய்வம் கட்புலனாகாது இருவரையும் கூட்டிற்று என்பதும், பெருந்தேன் என்ற அதனால் சிறு பூக்கொண்டு என்பது பெறப்பட, சிறு செயலாக இளநகைசெய்த ஒன்று

* 1958ஆம் ஆண்டில் கோடைக்கானலில் பூத்த குறிஞ்சிச் செடிகளின் புகைப்படமொன்று இலங்கை, முன்னாள் அமைச்சர், சுன்னாகம் திரு சு. நடேச பிள்ளை அவர்கள் அனுப்பிவைத்தார்கள். இப்படத்தினை இம்மலரில் வெளியிட்டுள்ளோம். தமிழிலக்கியத்திற் கூறப்படும் குறிஞ்சிக்கு இப்படம் பல்வகையாலும் விளக்கமாக அமைந்துள்ளது மகிழ்ச்சி தருவதாகும்.

(பொழிற்றொண்டர்)

கரந்தைத் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள்.

திருப்பாவை விழா.

விளம்பி மார்கழி 27-ஆம் நாள் (11—1—59) சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் திருவாலி திருநகரி அறக்காவலர், நாரணமங்கலம், திரு. K. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் தலைமையில் திருப்பாவை விழா நடைபெற்றது. அதுபோழ்து திரு. சிரோமணி தேவநாதாச்சாரியார் அவர்களும், திரு. வித்துவான் வீ. உலகவூழியர் அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள். திரு. ஆண்டாள் திருவுருவப் படமொன்றும் விழாவின்போது திறந்துவைக்கப்பெற்று சங்க மன்றத்தினை அணிசெய்யலாயிற்று. திருப்பாவை மனப்பாடப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் மூவர், மாணவியர் நால்வர்க்கு ரூ. 130/- பெறுமான பரிசுகள் வழங்கப்பெற்றன. போட்டியிற் கலந்து கொண்ட மற்ற பதினெரு சிறுவர்கட்குத் திருக்குறள் குறுஞ்சுவடி ஒவ்வொன்று அளிக்கப்பெற்றது. இவ்விழாச் செலவினங்கட்கு சங்க உறுப்பினர் திரு. வே. அச்சுதாநந்த கோபாலசாமி நாயுடு அவர்கள் ரூ. 115-ம் உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. K. M. சுந்தரம், பி. ஏ. எல். டி. அவர்கள் ரூ. 60-ம் நன்கொடைகளாக அளித்தமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

திருவெம்பாவை விழா.

விளம்பி மார்கழி 29-ஆம் நாள் (13—1—59) சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் சங்க உறுப்பினர் திரு. S. இராமச்சந்திர பத்தர் பி. ஏ. அவர்கள் தலைமையில் திருவெம்பாவை விழா நடைபெற்றது. அதுபோது திருவையாறு திரு. பண்டித. இராம. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களும், மன்னார்குடி திரு. தி. சி. இராமச்சந்திரன் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். திரு. மாணிக்கவாசக சுவாமிகளின் திருவுருவப் படமொன்று சங்க மன்றத்தில் திறந்து வைக்கப்பெற்றது. இப்படத்திற்கும் பிறவற்றிற்குமான செலவு பல அன்பர்களின் நன்கொடைகளைக்கொண்டு ஈடுசெய்யப்பெற்றது.

316-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பெருஞ்செயலாக மாறிவிட்டதென்பதும் கூறினாக, அறிந்து இன்புறுதற் குரியது இச்சொற்றொடர்.

அன்றி, குறிஞ்சியின் தண்டமைப்பும், இதற்குரிய வண்ண நொசி எண்ணும் (Chromosome number) இதுகாறும் கண்டு சொல்லப்படவில்லை. தண்டின் உள்ளமைப்பில் சிறப்பொன்றுங் காணுதற்கில்லை எனினும் ஸ்ரெபிலாந்தஸ் இனத்தின் தண்டினுள் பொதுவாகத் தசைநார் அணுக்கள் மிகுதியும் உள்ளன என்பர். மற்ற பூக்களைக்காட்டிலும் குறிஞ்சியில் தேன்மிகுதியும் உண்டாமாதலின் இதனை ஆங்கிலத்தில் Honey-head (தேன்தலை) என்பர்.

இரு பெரும் புலவர்கள்.

T. V. சதாசிவ பண்டாரத்தார்.

நம் தமிழ் நாட்டில் அரசு வீற்றிருந்து செங்கோல் செலுத்திய தமிழ் வேந்தர்களின் ஆட்சி கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியுற்றமை அறிஞர் பலரும் அறிந்ததேயாம். அதன் பின்னர் நம் தமிழகம், பிறமொழியாளர்களாகிய ஏதிலாரது ஆட்சிக்குள்ளாகி எல்லையற்ற துன்பங்களை நாளும் அனுபவித்து வந்தமையோடு தன் பெருமை குன்றித் தாழ்ந்த நிலையையும் எய்தியது. அன்னியர் ஆட்சி நடைபெற்ற காலங்களில் நம் தாய்மொழியாகிய தமிழ் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அக்காலங்களில் அவ்வயலாருடைய மொழிகளே அரசியல் மொழிகளாக அமைந்து பெருமையுற்றன. எனவே, தமிழ்மொழி ஆதாரவற்ற நிலையை அடைந்தது. அதனைப் போற்றுவாரும், கற்பாரும், கற்பிப்பாரும் மிகக்குறைந்து போயினர். அக்கொடிய காலங்களில் ஊர்தோறும் இளம்பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்துக் கல்விகற்பித்து வந்தவர்கள் பாலாசிரியன்மாரே எனலாம். அவர்களுள் ஒருபகுதியினர் வீரசைவப் பெருமக்கள் ஆவர். அவர்கள் தமிழ்ப்புலமையும் கடவுட்கொள்கையும் சீலமும் உடையவர்களாகத் திகழ்ந்தமையால், பேரூர்களிலும் சிற்றூர்களிலும் செல்வர்களாலும் பொதுமக்களாலும் பெரிதும் மதிக்கப்பெற்று வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் தமிழ்மொழியோடு மக்களது வாழ்க்கைக்கு இன்றியமையாத கணக்கு முதலியவற்றையும் இளஞ்சிறார்க்குக் கற்பித்து வந்தனர். ஆகவே, இளைஞர்களின் எதிர்கால நல் வாழ்விற்கு அடிகோலியவர்கள் அவ்வாசிரியர்களே என்று கூறலாம். உவாத்திமைத் தொழிலில் நல்ல ஊதியம் பெறுவதற்கு வாய்ப்பில்லாத அக்காலத்தில் பாலாசிரியர்கள், தாம் பெற்றதுகொண்டு அமைதியாக வாழ்க்கை நடத்தி வந்தமையோடு தமிழ்த்தொண்டினை இயன்றவரையில் புரிந்தும் வந்தனர்.

அவ்வாசிரியர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டு இரண்டுவகைப்படும். ஒன்று, தம்பால் கல்வி பயின்ற சிறுவர்களுள் ஆர்வமும் நுண்மதியும் உடையவர்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஊதியம் விரும்பாமல் இலவசமாகக் கற்பித்து அவ்விளைஞர்களைப் புலவர்களாகச் செய்தமை ஆகும். மற்றொன்று, தாம் வாழ்ந்துகொண்டிருந்த ஊர்களிலும் சார்ந்துள்ள பிற ஊர்களிலும் திருக்கோயில் கொண்டுள்ள இறைவன்மீது மாலை, அந்தாதி, கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ், கோவை முதலான நூல்களும், தலபுராணங்களும் பாடி அரங்கேற்றி யாண்டும் தமிழ்மணம் கமழுமாறு செய்தமையாம்.

பாலாசிரியன்மார்களாகிய அப் புலவர்பெருமக்கள் ஊர்தோறும் நடத்திவந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களாகிய குருகுலங்களே அன்னியர் ஆட்சியில் தாழ்ந்த நிலையிலிருந்த நம் தாய்மொழியாகிய தமிழை இயன்றவரையில் காத்துவந்தன என்று சொல்லலாம். அவ்வாசிரியர்களுள் ஒருவரது குடும்ப நிகழ்ச்சியொன்றை அடியிற் காணலாம்.

தமிழ் நாட்டின் வடபகுதியாகவுள்ள தொண்டை மண்டலத்தில் சித்தூர் மாவட்டத்தில் திருத்தணிகை என்னும் பேரூர் ஒன்று உளது. அது குன்றமெறிந்த குமரவேள் மலைமேல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தலம்; திருப்புகழ் ஆசிரியராகிய அருணகிரிநாதரால் பாடப்பெற்ற பெருமையுடையது. அது திருத்தணியல் என்று பழைய கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருப்பினும் இக்காலத்தில் திருத்தணி என்றே வழங்கப்படுகிறது. அவ்வூர், சென்னையிலிருந்து வடமேற்கே செல்லும் இருப்புப்பாதையில் அரக்கோணத்திற்கு வடக்கே எட்டுமைல் தூரத்தில் ஒரு புகைவண்டி நிலையமாக இருக்கின்றது. அதனைச் சூழ்ந்து கிழக்கே வடதிருவாலங்காடும், தெற்கே காஞ்சிமாநகரும், மேற்கே விரிஞ்சிபுரம் சோழசிங்கபுரம் என்ற ஊர்களும், வடக்கே திருப்பதி எனப்படும் திருவேங்கடமும் திருக்காளத்தியும் உள்ளன. இத்தலங்களுக்கு நடுவே முருகக் கடவுள் எழுந்தருளியுள்ள திருத்தணிகையைப் ‘புவிக்குயிராகும் திருத்தணி’ என்று அருணகிரியார் பாராட்டியிருத்தல் அறியத்தக்கது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த அப்பேரூரில் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரசைவ மரபில் தோன்றிய நல்லாசிரியர் ஒருவர் இருந்தனர். அப்புலவர்பிரான் கந்தப்பையர் என்னும் பெயரினர்; சிவஞான முனிவரின் முதல் மாணவரும், கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயருடையவரும், தணிகைப் புராணத்தின் ஆசிரியருமாகிய கச்சியப்ப முனிவர்பால் இலக்கண இலக்கியங்களைப் பயின்று சிறந்த புலமை படைத்தவர்; தணிகை அந்தாதி, தணிகைக்கலம்பகம், தணிகைஉலா, தணிகைப் பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்கள் இயற்றிப் புகழ் எய்தியவர். அவர் தம் மனைவியாருடன் இல்வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த காலத்தில், மகப்பேறின்மையால் மனம் வருந்தி அவ்வம்மையாரின் தங்கையையும் மணந்துகொண்டார். மனைவியர் இருவருக்குமே பிள்ளை இல்லை. புலமைவாய்ந்த குடும்பத்தினரைப் புதல்வனில்லாக்குறை பெரிதும் வருத்தியது. எனினும், தமக்கையும் தங்கையுமாகிய இருவரும் தம் நாயகன் மனம் உவக்கும்படி தம்முள் ஒற்றுமையுடையவர்களாகவே வாழ்ந்து வந்தனர். * ஒருநாள், இருவரும்

* பின் வரும் மகப்பேறு பற்றிய வரலாறு செவிவழிச் செய்திகொண்டு எழுதப்பட்டது.

தண்ணீர் முகந்துவரும்பொருட்டுத் திருத்தணிகையிலுள்ள ஓர் ஊருணிக்குச் சென்றனர். அப்போது வடக்கேயுள்ள திருவேங்கடமலை அவ்விருவர்க்கும் கட்புலனாயிற்று. அச்சமயத்தில் தங்கைக்கும் தமக்கைக்கும் ஓர் உரையாடல் நிகழ்ந்தது.

தங்கை: அக்கா, நாம் நாள்தோறும் வழிபட்டுவரும் தணிகாசலப் பெருமான் மக்கட்பேறு அடையுமாறு அருள்புரிந்தாரில்லை; இப்போது நம் கண்களுக்கு எதிரே தோன்றும் திருவேங்கட மலையிலுள்ள பெருமாளாவது நமக்கு அப்பேற்றை அளித்தருளினால் குழந்தைகளுக்கு அவருடைய திருப்பெயரையே வைத்து வழங்கலாம்.

தமக்கை: அவருடைய திருவருளால் மகப்பேறுண்டாயின் அப்படியே செய்வோம்; யானும் அங்ஙனமே வேண்டுகின்றேன்.

தங்கை: அக்கா, நாம் மறந்தும் பிறதெய்வம் தொழாத வீரசைவ மரபினர். இந்நிலையில் திருவேங்கடப் பெருமாள் அருளினால் நமக்கு மகப்பேறுண்டாயின் இப்போது கூறியதை நிறைவேற்ற இயலுமா என்பதுபற்றி எனது உள்ளம் ஊசலாடுகின்றது.

தமக்கை: நீ அதைப்பற்றிச் சிறிதும் கவலையுறவேண்டா; யான் அதில் உறுதியாகவே இருக்கின்றேன்; பார்த்துக் கொள்ளுகிறேன். பெருமாள் தான் நமக்கு அருள்புரிதல் வேண்டும்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு தண்ணீர்க்குடங்களுடன் தம் இல்லத்திற்குப் போயினர்; இச்செய்தியைத் தம் கணவனார்க்குக் குறிப்பாகக்கூட உணர்த்தவில்லை; மற்றையோரும் அறியார்.

சில திங்களுக்குப்பிறகு இருவரும் கருவுற்றுப் பத்தாந் திங்களில் ஒரே நாளில் ஒவ்வோர் ஆண்மகவைப் பெற்றனர். கந்தப்பையர் எல்லையற்ற மகிழ்ச்சி எய்தினர். மெல்ல மெல்ல ஓர் ஆண்டும் கழிந்தது. புலவர் பெருந்தகையார் தம் அருமைப் புதல்வர்களுக்கு ஆண்டு நிறைவு விழா நிகழ்த்திப் பெயரும் இடவேண்டும் என்று முடிவு செய்தார்; அப்போது, புதல்வர் இருவருக்கும் சரவணன், விசாகன் என்ற பெயர்களை வைக்க வேண்டுமென்னும் தம் கருத்தினை வெளியிட்டார். அச்சமயத்தில் அவருடைய மனைவிமார் இருவரும் திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள திருமாலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் தாம் வேண்டிக் கொண்ட பழைய நிகழ்ச்சியை எடுத்துரைத்துப் புதல்வர்களுக்குப் பெருமாள் பெயரை வைத்துத் தம் உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டுமென்று தம் கணவனாரைப் பணிவோடும் பரிவோடும் கேட்டுக்கொண்டனர். புலவர்

பிரானும் தம் மனைவிமாரின் உணர்ச்சிமிக்க வேண்டுகோளை மறுக்கவில்லை; 'அங்ஙனமாயின் விசாகப் பெருமாள், சரவணப் பெருமாள் என்ற பெயர்களை நம் புதல்வர்களுக்கு இடுவோம்' என்று கூறினர். அவர்களும் தம்வேண்டுகோள் நிறைவேற்றப் பட்டுவிட்டது என்று மகிழ்ந்தனர். பிறகு குறித்த நாளில் புதல்வர்களுக்கு அப்பெயர்களே இடப்பட்டன, ஆண்டு நிறைவு விழாவும் இனிது நிறைவேறியது.

முருகக் கடவுளுக்கு மயிலேறும் பெருமாள், ஆறுமுகப் பெருமாள், பன்னிருகைப் பெருமாள், சரவணப் பெருமாள், விசாகப் பெருமாள் முதலான பெயர்கள் உண்டு. எனவே, புலவர் பெருமானுகிய கந்தப்பையர் தம் வீரசைவக் கொள்கை தவருமல் மனைவிமாரின் உளம் உவக்குமாறு நடந்துகொண்டமை குறிப்பிடத் தக்கதோர் அரிய நிகழ்ச்சியாகும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் சென்னைமாநகரில் தமிழ்த்தொண்டாற்றிக்கொண்டு புகழுடன் விளங்கிய விசாகப் பெருமாளையர், சரவணப்பெருமாளையர் என்ற புலவர் பெருமக்கள் இருவரும் இவர்களே என்பது ஈண்டு அறியத்தக்கதாகும்.

இவர்களுள் விசாகப்பெருமாளையர் என்பார் இலக்கணப் பயிற்சி மிக்கவர்; இயற்றமிழாசிரியர் என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர்; சென்னையிலிருந்த அரசியலார் கலாசாலையில் தமிழாசிரியராகத் திகழ்ந்தவர்; பஞ்ச இலக்கண வினவிடை, பாலபோத இலக்கணம் என்ற இலக்கணநூல்களை இயற்றியவர்; வடமொழியிலுள்ள 'சந்திராலோகம்' என்னும் அணியிலக்கணத்தைத் தமிழில் உரைநடையில் மொழிபெயர்த்து உதாரணச் செய்யுட்களையும் அமைத்தவர்; பல தமிழ் நூல்களைத் தம் மாணவர்கட்குப் பாடஞ் சொல்லியமையோடு அச்சிட்டும் வெளியிட்டவர்.

சரவணப்பெருமாளையர் என்பார் சிறந்த தமிழ்ப் புலமை படைத்தவர்; பிரபுலிங்கலீலை, திருவள்ளுவமாலை முதலான பல நூல்களுக்கு உரை எழுதியவர்; 1838-ஆம் ஆண்டில் முதன்முதல் திருக்குறளை உரையுடன் அச்சிட்டு வெளியிட்ட பெருமையுடையவர்.

தமிழ் நாட்டில் ஆங்காங்குக் கிடைத்த தனிப்பாடல்கள் பலவற்றையும் தேடித்தொகுத்து ஆசிரியர் பெயர்களுடன் 'தனிப் பாடற்றிரட்டு' என்ற நூலை முதலில் வெளியிட்ட தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராசபண்டிதரும், சென்னையம்பதியில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடையில் புகழுடன் நிலவிய தமிழாசிரியர் மழவை மகாலிங்கையரும் இவ் விரு புலவர் பெருமான்களின் மாணவர்களே என்பது உணரற்பால தொன்றும்.

தமிழகப் புலவர் குழு.

வித்துவான், ந இராமநாதன்.

முத்தமிழ்க்காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதமவர்களின் சீரிய முயற்சியால் "தமிழகப் புலவர் குழு" பொங்கற் புதுநாளில் வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெரு நகரான திருச்சிராப்பள்ளியிற் கூடியது. இக்குழு புலவர்களின் எண்ணிக்கையாலும், மற்ற சிறப்புக்களாலும் கடைச்சங்கப் பழமைத் தொடர்புகொண்டு விளங்குகின்றது. வழங்கத் தொலையா வளமும் வள்ளன்மைக் குணமும் சான்ற புரவலர் பெருமக்கள் சிலரும் இக்குழு இயங்குதற்குறுதுணையாக நிற்கின்றனரென்று அறிகின்றேம்.

இப்புலவர் குழுவில் தமிழ் நாட்டின் தலைசிறந்த பேரறிஞர்களும், தமிழார்வமுடைய நல்லறிஞர்களும் பங்குகொண்டமை பெருஞ்சிறப்பிற்குரியதாகும். பேரறிஞர் திரு. மு. வரதராசனுர், பன்மொழிப் புலவர்களான திரு. தெ.பொ.மீனுட்சிசுந்தரனுர், திரு. ஞா.தேவநேயப் பாவாணர், திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை, திரு. சி. இலக்குவனுர் போன்ற பெருமக்கள் கலந்துகொண்டு உரைவழங்கிச் சிறப்பித்தனர். இவர்கள் தமிழிற்காகப் பன்னெடுங்காலமாக எழுத்தாலும், பேச்சாலும் இனிய தொண்டாற்றி வருபவராவர். "இன்பமெனப் படுதல்-தமிழ்-இன்பமெனத் தமிழ் நாட்டினர் எண்ணுக" என்றுற் போலத் தமிழார்வத்தையும் பற்றையும் தன்னுடைய இனிய கவிதைகள் மூலம் ஊட்டி வரும் கவிஞர் திரு. பாரதிதாசனுர் ஒருபால் வீற்றிருந்து கருத்துரை வழங்கி அணி செய்தனர். தண்டமிழில் வழங்கும் பண்டைய உரையாசிரியர்கள் ஓருருவெடுத்து வந்தாற்போல் விளங்கும் உரையாசிரியரும் நல்லறிஞருமாகிய ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் போந்திருந்து பொருளுரை நல்கிச் சிறப்பித்தனர். தமிழகவரலாற்றுத் துறையில் புதுநெறிகாட்டிப் புதுக்கிய புலவர் திரு. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள் குழுவில் கலந்துகொண்டதோடு தலைவராகவும் வீற்றிருந்து அறிவுரை புகன்றனர். பேராசிரியர்களான திரு. லெ. ப. கரு. இராமநாதஞ் செட்டியாரவர்களும், திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளையவர்களும், புலவர் திரு. மு. அருணசலம் பிள்ளையவர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை அவ்வப்போது நல்கினர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பட்டம் பெற்ற பழம்புலவர்களான திரு. அ. கந்தசாமிப் பிள்ளையவர்களும், திரு. தி. சங்குப்புலவரவர்களும் குழுவிற் கலந்துகொண்டனர். இவர்களன்றித் தமிழ் நாட்டின் கலைக்கல்லூரிகளில் தமிழ்த்துறைத் தலைவராகவும், விரிவுரையாளராகவும் விளங்கும் திரு. ஆலாலசுந்தரஞ் செட்டியார், திரு. அ. கி. பரந்தாமனுர், திரு. சோதிமுத்து போன்ற பெருமக்களும் கலந்துகொண்டனர். தமிழ் நாட்டின் கலைக்கூடங்களில் கல்வி பயிலும் மாணவர் பல்லாயிரவர்க்குப் பாடநூற் குறிப்புரை வழங்கித் தமிழ்த் தொண்டாற்றிவரும் நல்லறிஞரான திரு. ஐயன்பெருமாள் கோனரவர்கள் பங்கு பெற்றதோடு குழு இயங்கு

தற்கான செயல் புரியும் அமைச்சராகவும் இருக்க ஒத்துக்கொண்டு சிறப்பித்தனர். தமிழ் நாட்டில் விளங்கும் தமிழ்க் கல்லூரிகளான திருவையாற்று அரசர் கல்லூரிச் சார்பில் வித்துவான், திரு. சிவப்பிர காசச் சேதிராயரவர்களும், கரந்தைப் புலவர் கல்லூரிச் சார்பில் வித்துவான், திரு. ந. இராமநாதனவர்களும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரிச் சார்பில் திரு. சங்கரநாராயண அய்யா அவர்களும், பனசைக் கல்லூரிச் சார்பில் திரு. வேங்கடராமையா அவர்களும், தருமைக் கல்லூரிச் சார்பில் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்களும், பேரூர் கல்லூரிச் சார்பில் வித்துவான், திரு. இராம சாமி அடிகளவர்களும், மயிலம் கல்லூரிச் சார்பில் வித்துவான், திரு. துரைசாமி அய்யரவர்களும் பங்குகொண்டனர்.

இவ்வாறு தமிழ் நாட்டில் வாழும் புலத்துறை முற்றிய நலத் தகையார் பலரைத் தன்பாற்கொண்டு "தமிழகப் புலவர் குழு" விளங்குகின்றது. இப்புலவர் குழுவிற்குத் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கச் சார்பில் வரவேற்பிதழ் படித்தளிக்கப்பெற்றது. வர வேற்புரைக்கு விடை கூறுமுகத்தான் எழுவர் நல்லுரை யாற்றினர். இருவர் உரைக் கருத்துக்களைச் சிறப்பாக ஈண்டுக் குறிக்கலாம். கவிஞர், திரு. பாரதிதாசனவர்கள் பேசும்போது, அறிஞர் பலர் ஒன்றுகூடிச் செயலாற்றுவது என்றால் அது கொள்கை அடிப்படை யில்தான் முடியும் என்றும், கொள்கையின்றிக் கூடிப் பயனில்லை என்றும், தற்காலத்துள்ள தமிழக நிலையை ஒட்டிக் கொள்கைகள் இவைகளாக இருக்கவேண்டுமென்று தாம் குறித்து வைத்திருந்த பத்துக் கொள்கைகளை விளக்கினர். பேரறிஞர், மு. வரதராசனர் இப்புலவர் குழுவின் நோக்கம், திட்டம் பற்றியும், இன்றுள்ள சூழ் நிலையில் இது நன்முறையில் செயற் படுதற்கான வாய்ப்பு வசதி கள் பற்றியுமான செய்திகளை யெல்லாம் திரு. கி. ஆ. பெ. விசுவநாத மவர்களோடு உசாவியதாகவும், அவைகளிற் கூடத் தன் மனம் ஈடு படவில்லை யென்றும், ஆனால் திரு. விசுவநாதமவர்கள் இறுதியில் தன்னிடம் கூறிய உரைகளே தன்னை இக்குழுவில் ஈடுபடுத்திய தென்றும் கூறினர். அவ்வுரைகள் வருமாறு:—

"என்னுடைய வாழ்நாளின் இறுதி முயற்சி இது. தமிழக நன்மைக்காக யான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் நன் முறையில் வெற்றிபெறவில்லை. புலவர் குழுவைக் கூட்டி அதன் மூலம் முயன்று பார்ப்போமென இறுதியாக முயல்கின்றேன். இம் முறையில் என்னுடைய பங்காக, அல்லது தமிழ் மக்களின் பங்காக வுள்ளது செயல்புரிவதேயாகும். செயல் புரிதற்கு வேண்டிய திட்டங் களைப் "புலவர் குழு" தருதல் வேண்டும். சுருக்கமாக—'புலவர் குழுவில் பங்கு கொள்ளும்-நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் செய்கின் றோம்' என்பதாகும்".

'சொல்லுங்கள்; செய்கின்றோம்' என்ற இந்த இரண்டு சொற் களும் பேரறிஞர் உள்ளத்துணர்வுகளை ஈர்த்துப் "புலவர் குழு"வில் சேரத் தூண்டிவிட்டதாகக் கூறினர். மேலும் பேசும்போது

இன்றுள்ள தமிழகச் சூழ்நிலையில் நாம் எவ்வாறு செயல் புரிய வேண்டுமென்பதையும் திரு. மு. வரதராசனவர்கள் பின்வருமாறு நன்கு விளக்கினர் :

"தமிழகத்தில் வாழும் தமிழர்களாகிய நாம் சிறுபான்மையராக் கப்பட்டுவிட்டோம். இது நம் குறையல்ல. தொன்றுதொட்டு நம் முன்னவர் இயற்றிவந்த குறைகளின் விளைவேயாகும். தமிழ் நாட்டின் பண்டைய பெருவேந்தர் வீரங்காட்டிய அளவிற்குத் தமிழ்ப் பணி புரியத் தவறிவிட்டனர். தம் அரசு சென்ற விடமெல்லாம் தமிழைப் பரப்பியிருந்தால் நாம் சிறுபான்மையராக வழியில்லை. இக் குறையைச் சேரன் செங்குட்டுவன் மீது சுமத்துகிறேன். பாண்டியன் நெடுஞ்செழியன்மீது சுமத்துகின்றேன். திருமாவளவனென்னும் கரிகால் வளவன்மீது சுமத்துகிறேன். கங்கைகொண்டான், கடாரங்கொண்டான்மீது சுமத்துகிறேன். இன்று படைவலிகொண்டு நம்முன்னே நின்று போருடற்ற வாருங்கள் என்று அறைகூவுவார் இல்லை. ஆனல் வெளிப்படாது நின்று சூழ்ச்சியால் தமிழ் வாழ்வை அல்லது தமிழர் வாழ்வைத் தொலைப்பவர் மிகுதியாகவுண்டு. இந் நிலையில் சிறுபான்மையராகவுள்ள நாம் நன்கு சிந்தித்துச் செயல் புரிந்தால் முன்னேற முடியும். சிறுபான்மையோர் ஒற்றுமையாலும் உளத்திட்பத்தாலுமே முன்னேறலாம். அத்தகைய ஒற்றுமையையும், உளத்திட்பத்தையும் பொங்கல் நாளிற்கூடிய 'புலவர் குழு' நல்குமாக".

'புலவர் குழு' இயங்குதற்கான அடிப்படை அமைப்பு விதிகள் ஆயப்பெற்று நன்முறையில் நிறைவேறின. 'புலவர் குழு' ஆண்டிற்கு மும்முறை தமிழகத்தின் மூன்று வேறிடங்களில் கூடும். தைத் தொடக்கம், சித்திரைத் தொடக்கம், கலைமகள் விழா நாள் ஆயவற்றில் கூடுவதென முடிவு செய்யப்பெற்றது. அம்முறையில் அடுத்து நிகழவிருக்கும் கூட்டம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழுமெனவும், அதற்கடுத்த கூட்டம் மதுரையில் நிகழுமென்றும் அறிவிக்கப் பெற்றது. தற்காலத்திற்கேற்பத் தமிழிற்கு ஆக்கம் நல்கும் பல முடிபுகள் நிறைவேற்றப்பெற்றன.

பொங்கல் நாள் தமிழகத்தின் தலைசிறந்த விழா நாளாகும். காலமெல்லாம் உழைத்தலுத்த உழவர் கூட்டம் உழைப்பின் பயனை அடையவிருக்கும் நாட்களின் தொடக்கமே பொங்கல் நாளாகும். இக்காலம் தொடங்கித் தமிழகத்தின் வீடுகளெல்லாம் புதிய விளை பொருள்களால் பொலிவுபெறுவதைக் காணலாம். இத்தகைய நன்னாளிற் கூடிய "தமிழகப் புலவர் குழு" தமிழகத்திற்குத் தமிழோடியைந்த புதுவாழ்வை நல்குமாக.

தேனவரை நாயனூர் சாசனம்

(மயிலை. சீனி வேங்கடசாமி)

இலங்கையிலே கொளும்பு நகரத்துப் பொருட்காட்சிசாலையிலே ஒரு சாசனக்கல் இருக்கிறது. இந்தச் சாசனக்கல் இலங்கையின் தென்கோடியில் உள்ள **காலி** என்னும் ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்தக் கல் 4 அடி 9 அங்குல நீளமும், 2 அடி 6 அங்குல அகலமும், 5 அங்குலக் கனமும் உள்ளது. இதிலே தமிழ், சீனம், பாரசீகம் என்னும் மூன்று மொழிகளில் சாசனம் எழுதப்பட்டுள்ளது.

(இந்தக் கல் கண்டெடுக்கப்பட்ட வரலாறு முதலியவற்றை J. R. A. S. (C. B.) Vol. XXII. P. 129-ல் காண்க. இந்தச் சாசனத்தின் மொழிபெயர்ப்பு முதலிய செய்திகளைப்பற்றி The Galle Trilingual Stone by Mr. E. W. Perera, Spolia Zeylanica Vol. viii pp 122 ff. காண்க.)

சீன தேசத்துச் சக்கரவர்த்தி யுவுங் லோ வின் 7ஆம் ஆண்டில், இரண்டாம் மாதத்தில் இந்தச் சாசனங்கள் எழுதப்பட்டன. யுவுங் லோ அரசன் கி. பி. 1403இல் ஆட்சிக்கு வந்தான்.

தேனவரை நாயனரின் புகழைக் கேள்விப்பட்ட சீனத்து அரசன், தமது தூதர்களாகிய சிங்வோ, உவிங் சுவிங் என்பவர்களின் மூலமாகச் சில பொருள்களைக் காணிக்கையாக அனுப்பியதையும் அப்பொருள்களின் விபரத்தையும் இந்தத் தமிழ் சாசனம் கூறுகிறது. சீனமொழி சாசனத்தில் இந்தத் தூதர்களின் பெயர்கள் ச்சிங் ஹோ என்றும் வங் ச்சிங் லீன் என்றும் கூறப்படுகின்றன.

தமிழ்ச் சாசனம் தேனவரை நாயனரைத் தேனவரை ஆழ்வார் என்றும் கூறுகிறது. தெய்வங்களை நாயனர் என்றும், ஆழ்வார் என்றும், பட்டாரகர் என்றும் கூறுவது தமிழ் மரபு. சீனமொழி சாசனம், ஷை சீனத்து அரசன் புத்தர் கோவிலுக்கு அளித்த காணிக்கைப் பொருள்களைக் கூறுகிறது. பாரசீக மொழி சாசனம் மிகவும் சிதைந்து, அழிந்து காணப்படுகிறபடியால் யாருக்குக் காணிக்கைப்பொருள் அளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. முகம்மதியர் சம்பந்தமான நிலையத்துக்கு அளிக்கப்பட்ட காணிக்கைப் பொருள்களைக் கூறுகின்றது என்பதில் ஐயமில்லை. தமிழ்ச் சாசனத்தில் கூறப்படுகிற காணிக்கைப் பொருள்களைப் போன்ற பொருள்களே மற்ற இரண்டு சாசனங்களிலும் குறிப்பிடப்படுகின்றன.

சிங்கள மொழியில் தேவுநுவர என்பது தேவநகரம் என்று பொருள்படும். இப்போதைய சிங்கள மொழியில் இந்நகரம் தேவுந்தர என்று வழங்கப்படுகிறது. தமிழில் தேனவரை என்று வழங்கப்படும் போர்ச்சுகீசியர் இப்பெயரை தனவரெ என்று வழங்கினுர்கள். ஆங்கிலத்தில் இப்பெயர் தொண்ட்ரா என்று வழங்குவர். இந்த நகரம் இலங்கைத்தீவின் தென்கோடியில் இருக்கிறது. இது பண்டைக்காலத்தில் பேர்போன துறைமுகப்பட்டினமாக இருந்தது.

17ஆம் நூற்ருண்டில், போர்ச்சுகேசியர் கொளும்பு துறைமுகம் உண்டாக்கிய பிறகு, பழைய துறைமுகப் பட்டினமாகிய தேனவரை நாளடைவில் சிறப்புக்குன்றி, சாதாரண சிறு கிராமமாக மாறிப் போயிற்று.

தேனவரைத் துறைமுகப்பட்டினம் சிறப்புற்றிருந்த காலத்தில் அக்காலத்து வியாபாரக் கப்பல்கள் இங்குவந்து தங்கின. மிகப் பழைய காலத்தில் யவனக் கப்பல்கள் (கிரேக்க கப்பல்கள்) இங்கு வந்தன. பிற்காலத்தில் அரபியர்களும், சீனர்களும் மற்றவர்களும் இந்தத் துறைமுகத்தில் தமது வியாபாரப் பொருள்களைக் கொண்டு வந்து இறக்கியும், இங்கிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டும் வியாபாரம் செய்தார்கள். தொன்றுதொட்டு தமிழகக் கப்பல் வியாபாரிகளும் இந்நகரத்தில் வியாபாரம் செய்தனர். அன்றியும், தமிழர் பலர் இந்நகரத்தில் தங்கிக் குடியிருந்தனர். அவர்கள் இந்நகரத்திலே வருணனுக்குக் கோயில் அமைத்து வழிபட்டனர்.

தேனவரை நகரத்தில் கோயில் கொண்டிருந்த வருணனைச் சிங்களவர் தமது மொழியில் உபுல்வன் (இது உதகபால வருணன் என்பதன் திரிபு) என்று வழங்கினுர்கள். பிற்காலத்தில் உபுல்வன் என்னும் சொல் உப்பலவண்ணன், உத்பலவர்ணன் என்று பாலி மொழியிலும், வடமொழியிலும் கூறப்பட்டது. பின்னர், மாலிக் காபூர் முதலான முகம்மதியரின் படையெடுப்புக்காலத்தில், தமிழ் நாட்டுப் பார்ப்பனர் சிலர் சிங்களஅரசரிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களை ஆதரித்த சிங்கள அரசர் அவர்களைத் தேவாலயங்களில் (பௌத்த ஆலயங்கள் அல்ல-இந்து தேவாலயங்கள்) பூசை செய்ய நியமித்தார்கள். நாளடைவில், காலப் போக்கில், இவர்கள் உப்பலவண்ணனை விஷ்ணுவாக மாற்றிவிட்டனர். தேனவரை நகரத்திலும் பார்ப்பனர் குடியிருந்த செய்தி சாசனங்களினுல் தெரிகிறது.

தேனவரையில் இருந்த (உபுல்வன்) உப்பலவண்ணனைப் பிற்காலத்தவர் தேனவரை ஆழ்வார் என்றும், தேனவரை நாயனுர் என்றும் பெயரிட்டழைத்தனர். சிங்களவர் தேவுந்தர தேவியோ (தேவுந்தர நகரத்துத்தெய்வம்) என்று வழங்கினுர்கள்.

கி. பி. 15ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலே தேனவரை நாயனுர் கோவில் சீனநாடு வரையில் புகழ்பெற்றிருந்ததென்பதை இந்தச் சாசனத்தினுல் அறிகிறோம். (இந்நகரத்தில் முற்காலத்தில் இருந்த வருணன் (உபுல்வன்) கோயிலைப்பற்றியும், வருணன் வழி பாட்டைப் பற்றியும் முன்னைய ‘பொழில்’களில் கூறியுள்ளேன்).

1. ஸ்வ(ஸ்தி) ... ...
2. இரா சாதி ராச பரமேசுரன் பூர்ண சந்திரப் பிரகாசன் சீனத்தில்
3. மஹாஇராசா இலங்கா ராச்சியத்தில் நாயினுர் தேநவரை
4. நாயினுர்க்குத் திரு முன் காணிக்கையாக நாயினுர் பிரகா
5. சங்கேட்டு தூதர் சிங்வோ உவிங்சுயிங்ங் கையி
6. லே வரக்காட்டினது || இப்பாசிதம் கேட்ப்பது || இ

7. ந்தப் புவனத்திலுண்டான பிராணிகளெல்லாம் நாயி
8. ஞர் கிருபையினாலே சுகமே பரிபாலியா நின்றது || ஆங்கு வரு
9. கிற ரோகங்கும் மனித்தரும் தேநவரைநாயினூர் திரு அரு
10. ளத்தால் ஒழிந்தாண்டரையேயாள் நின்றது || இப்படியை
11. த் தேன்வரை ஆழ்வார்க்கு காணிக்கை ஆக காட்டினது ||
12. ஆகப்படி பொன் வெள்ளி துலுக்கி பட்டு சந்தனம்
13. எண்ணைக் காப்புப் பல காணிக்கைக்கு வகை பொன் ஆயிரம் க
14. ழஞ்சு வெள்ளி அய்ஞ்சாயிரக் கழஞ்சு பல நிறத் துலுக்கி அய்ம்பது பல
15. நிறப் பட்டு அய்ம்பது பொன் எழுத்து (காசதார)த் தூசஞ் சுவடு நாலு
16. ந்த சுவடு இரண்டு நீலத் தூசஞ் சுவடு இரண்டு பழஞ் செப்பு சிவ தூர்பம்இ
17. டுகிற செப்புப் பாத்திரம் அஞ்சு பூக்குத்துகிற செப்புக்
18. கெண்டி பத்து கறிக்கால் பத்து குத்து விளக்கிச் சாவான் அஞ்சு கறி
19. க்கால் அஞ்சு மரத்தாலே பொன் பூசின தாமரைப்பூ சுவடு ஆறு
20. அகில் வைக்கிற பொன் பூசின செப்பு அஞ்சு மெழுகுதிரி சுவடு பத்து
21. எண்ணை இரண்டாய்ரத்து அஞ்ஞூறு கட்டி சந்தன முறி
22. பத்து ஆ௩ இவ்விசைப் படியாலுள்ளது.........நாயினூர்
23. தேனவரை நாயினூர்க்கு திரு முக்காணிக்கையாகக் குடுக்கவும் ||
24. யுங்லொக்கு யாண்டு ஏழா யிரண்டா (ம்ம) டி || *

குறிப்பு:— 6-ஆம் வரி "இப்பாசிதம் கேட்பது" என்பதில் பாசிதம் என்பது பாஷிதம் என்னும் சொல்லின் திரிபு. 8, 9ஆம் வரி "வருகிற ரோங்கும்" என்பதை "வருகிறவ ரோங்கும்" என்று வாசிக்கவும். 12, 14ஆம் வரிகளில் வருகிற "துலுக்கி" என்பது பட்டுத்துணியைக் குறிக்கிறது போலும். 13, 21ஆம் வரிகளில் வரும் "எண்ணை" என்பதை, "எண்ணெய்" என்று வாசிக்கவும். 15ஆம் வரியில் "தூசம்', என்பது துவசம் என்பதன் திரிபு போலும். துவசம் = கொடி. ஷிவரியில் "சுவடு" என்பது இரட்டை என்ப்பொருளுள்ள சோடி என்பதன் திரிபாக இருக்கலாம். 21ஆம் வரி இரண்டாயிரத்து அஞ்ஞூறு கட்டி என்று வாசிக்கவும். கட்டி என்பது முகத்தல் அளவை. சீன நாட்டுச் சொல்லாகிய "சட்டிஸ்" என்பதன் திரிபுபோலும். சந்தன முறி = சந்தன மரத்துண்டு.

* Epigraphia Zeylanica Vol. III.

வரலாறுகொண்ட நாகத்தீ(வு).

வித்துவான். சி. கோவிந்தராசன்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

பண்டைத் தமிழகத்தின் உண்மை வரலாற்றினைத் தன்னகத்தே மறைத்துவைத்துத் தரிசாகவும், காடுகரம்பாகவும் காட்சியளிக்கும் சிற்றூர்களில் இன்று 'நாகத்தி' என்று அழைக்கப்படும் நாகத் தீவும் ஒன்றாம்.

இச்சிற்றூர், தஞ்சையிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் நேர் சாலையினின்றும் வெட்டாற்றின் வடகரையாகப்பிரியும் மட்சாலை வழியாக நேர் மேற்கே நான்கு கல் அளவில் அமைந்துளது.

இவ்வூரை நாகத்தி என்று அழைப்பதற்கு இவ்வூரிலுள்ள முதியவர்கள் கூறும் கதைகள் பலவாகும். அவற்றுள், பன்னூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த நாகம்மை என்னும் அரசியின் விருப்பப்படி, அவ்வம்மை இறந்த பிறகு, அத்தியை (எலும்பை) தாழியிலிட்டு இச்சிற்றூரில் புதைத்தார்கள் என்றும். அதனால் நாகம்மை அத்தியை உடைய காரணங்கொண்டு நாகம்மை அத்தியூர் என்பது மருவி நாகத்தியாயிற்றென்று கூறும் கதையும் ஒன்றாம்.

நமது தமிழகத்தின் பழைய உண்மை வரலாறுகள் மறைந்த தற்குரிய காரணங்களுள் ஒன்றாய புராணச் சுவையில் மயங்கியவர்கள் கூறும் கதைகளே இவைபோல்வனவென்பதை யாவரும் அறிவர். ஆயினும் இப்புனைந்துரையுள்ளும் மறைந்துகிடக்கும் உண்மை வரலாற்றுச் சுவடுகள் உண்டு.

வரலாறு என்பது சென்ற காலத்தின் திறனாகவும் வருங்காலத் திற்கு முளையாகவும் அமைகிறது. எனவே, தமிழகத்தின் உண்மை வரலாறுகளைக் காண ஆர்வம் பிறந்துள்ள இக்காலத்தில் மிகுதி யாகவும், புனைந்துரையாகவும், இடைக்கால மாசாகவும் எழுந்தன வனைத்தும் அறிவகத்தினின்றும் பெயர்ந்தெழ, உண்மை வரலாறு களும், சின்னங்களும் நிலைபெற்று வருகின்றன.

'செந்தலை' என்று இப்பொழுது வழங்கப்படும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்திற்குத் தென் கிழக்கே அமைந்துள்ள இச்சிற் றூரினை (நாகத்தி) நன்கு ஆய்ந்து அறிய விரும்பிய யான் சென்ற சில திங்களில் பன்முறை சென்று நன்கு அப்பகுதியைத் துருவி ஆய்ந்து வரலானேன். அம்முயற்சியில் கிடைத்த உண்மைச் சுவடுகளையே ஈண்டு குறிக்க விழைந்தேன்.

இவ்வூரின் அமைப்பு மிகவும் வியக்கத்தக்கதாக அமைந் துள்ளது. கிழக்கு மேற்காக நீண்டு நாற்புறமும் ஆறுகளால் சூழப் பட்டுள்ள இந்நிலப்பகுதி ஒரு தீவாகவே காட்சியளிக்கின்றது. இத் தீவிற்குத் தென்புற வெல்லையாக அமைந்திருப்பது வெண்ணாற்றி லிருந்தும் பிரியும் வெட்டாறேயாம். இவ்வெட்டாறு நாகத்தியின்

மேற்புறத்தில் இரண்டாகப் பிரிந்துள்ளது. ஒரு பகுதி மேலெல்லையாக வடக்கு நோக்கி ஒரு கல் அளவு ஓடியபின் வளைந்த பாங்கில் கிழக்கு நோக்குகிறது. இங்கு, மிகப் பழமையுடையதும், வரலாறு கொண்டதுமாய 'கடுங்கால்' என்னும் பெருவாய்க்கால் கூடுகிறது. கடுங்காலின் நீர்ப் பெருக்கும் கிளை வெட்டாற்றின் பெருக்கும் கலந்து ஊரின் வடவெல்லையாக, நிலப்பாங்கிற்கேற்ப வளைவுகள் பலகொண்டு ஓடுகிறது. இவ்வாறமைந்துள்ள கிளை வெட்டாறும், எதிரிட்டு ஊரின் தென்னெல்லையாக ஓடிவரும் நேர் வெட்டாறும், கிழக்கு நோக்கி ஓடுங்கால் ஒன்றை ஒன்று குறுகிச் சரியாக இரண்டு கல்லளவில் ஒன்றுகூடுகின்றன. இவ்வாறு மேற்புறம் அகன்றும், கீழ்ப்புறம் நெளிந்தோடிக் குறுகி முடிந்தும் அமைந்திருக்கும் இச் சிற்றூரின் அமைப்பு, படம் விரித்துப் படுத்த நாகமொன்றின் தோற்றத்தோடு விளங்கும் ஆற்றிடைக் குறையாகவே அமைந்துளது. இன்று இவ்வூருக்குச் செல்லக் கிளைவெட்டாற்றில் அண்மையிற் கட்டப்பட்டுள்ள பாலம் இல்லையெனில், எத்திசை வழிக்கொளினும் ஆறுகளைக் கடந்தே செல்லுதல் வேண்டும்.

இவ்வாறு படநாகத்தின் படிந்தநிலையொத்த நிலவடிவும் தீவாக அமைந்துள்ள பாங்கும் ஒன்றிய சிறப்பினுனே, இவ்வூரின் பெயர் "நாகத்தீவு" (நாகம் + தீவு) என்று அழைக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதை முடிபு செய்யலானேன். எண்ண முடிபாகக் கூறுவது இயல்பாகாதென்று மயங்கிய பின்னர், மேலும் ஆய்ந்தபோது இவ்வூரில் இரண்டு கல்வெட்டுகள் இருப்பதைக் கண்டேன். அவற்றுள் ஒன்று சென்ற நூற்ருண்டினதாக இருந்தும் எனது எண்ணத்திற்குப் பற்றுக்கோடாக அமைந்துளது.

இச்சிற்றூரின் பெரும்பகுதி தரிசாக உள்ளது. ஒரு சில பகுதிகள் குடியிருப்பு, நன்செய் புன்செயாகவும் இப்பொழுது காட்சியளிக்கின்றன. தீவின் மேற்கு வரம்பின் இடைப் பகுதியிலேயே ஊரமைந்துள்ளது. இப்பகுதிக்குத் தென் கிழக்கே தரிசாகவும், புதராகவும் பரந்து கிடக்கும் இடத்தில் சிதைந்த தோற்றத்தில் காட்சியளிப்பதே ஐயன் கோயிலென்று ஊரார் கூறும் கோட்டமாகும். இக்கோட்டம் மிகப் பழைமை உடையதென்பதற்குத் தக்க இலச்சினைகள் உள்ளன. கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. திருச்சுற்றின் பெரிய மதிற்சுவர் சிதைந்து, கற்குவியலும், புதருமாகக் காட்சியளிக்கின்றது. ஆயினும், திருச்சுற்றின் தலைவாயிலும், பரிவார தெய்வங்களின் சிறு கோயில்களும், வெண் சுதையால் எழுந்து நிற்கும் யானையும் கிழக்குப் புறத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஐயனின் திருவுருவமும் கோயிலும் மேற்கு நோக்கி அமைந்திருக்க, மற்றவை கிழக்கே அமைக்கப்பட்டுள்ள நிலையை அறியவியலவில்லை.

ஐயனின் திருவுருவம் மிகவும் தொன்மையான சிற்ப இலக்கணமுடையதாகவுளது. அமர்ந்த பாங்கிலுள்ள ஐயனின் திருவுருவத்

திற்கு இடப்புறமாக தேவியின் திருவுருவம் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றது * இவ்விரு சிற்பவுருவங்களும், ஐந்தடி உயரமும் நான்கடி அகலமும் உள்ள ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இருக்கையில் அமர்ந்துள்ள ஐயன் வலது காலை இருக்கையில் மடக்கி ஊன்றியும், இடது காலைத் தாழ அமைத்தும், வலது கையைப் பெருமிதத்தோடு ஊன்றிய முழந்தாளின்மேல் பொருத்தி நீட்டியும், இடது கையைத் தேவிக்கு அருகே இருக்கையில் ஊன்றியும் இருக்கும் தோற்றம், வலியாலும், திருவாலும், வள்ளன்மையாலும் பெருமிதங்கொண்டு விளங்கும் பேரரசனொருவனின் தோற்றமாகவே மிளிருகின்றது. அழகு சுமந்திலைத்த வடிவோடு தேவியின் நிலையும் ஒளிருகின்றது. இருக்கையின் வலதுபுறம் ஞமலியின் சிற்பமொன்றும் இணைந்து காணப்படுகின்றது. ஐயன் தேவி ஆகிய திருவுருவங்கட்கு முடிமேல் புனைந்து அழகுசெய்யும் திருமுடிகள் இல்லை. இயற்கையான நிலையில் ஐயனின் தலைமுடி சுருண்டு பின்புறம் விரிந்து செறிந்து நிற்கிறது. தேவியின் கூந்தல் இயற்கையாகவே நேர் வகிடிடப்பட்டுப் பின்புறம் கொண்டையாக அமைக்கப்பட்டுளது. நெற்றியில் சுட்டிக்கு ஈடாகக் காசுப்பட்டம் கட்டப்பட்டுள்ளது. இச்சிற்ப அமைப்பு மாமல்லபுரத்திலுள்ள மகேந்திரவர்மன் சிம்மவிட்டுணு ஆகியவரின் மனைவியரென்று ஆய்வாளர் கூறும் சிற்பங்களின் பாங்கினை ஒத்து உள்ளது. இவ்விரு வடிவங்களையும் பல்லவர் காலப்படிமங்களின் சிற்ப அமைப்புக்களோடு ஒப்பிடின், அவற்றோடு ஒத்த நிலையில் விளங்குவது தெளிவாம். மற்றும், இன்று தெய்வமெனக் கூறப்படும் இச்சிலைகள் ஒரு பேரரசன் அரசி ஆகியோரின் படிமங்களாக இருக்கலாம் என்று கூறுவதற்கும் சிற்ப முறையும் தோற்றமும் இடந்தருகின்றது.

இச்சிற்றூரைச் சார்ந்தும் சூழ்ந்தும் உள்ள ஊர்கள், இராசேந்திரம், செந்தலை, திருக்கருப்பூர், வெள்ளான்பெரம்பூர் ஆகியவைகளேயாம். இப்பகுதிகளெல்லாம் முத்தரைய மன்னர் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றுண்டிலிருந்தே ஆர்க்காட்டுக் கூற்றத்துள் அடங்கிய ஊர்களாக இருத்தமையைச் செந்தலை சிவன் கோயிலிலுள்ள கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. எனவே இடையே உள்ள இத்தீவும் அப்பகுதியைச் சார்ந்தே இருந்திருக்கவேண்டும். மற்றும் இந்நிலத் திட்டை அகழிகள்போல் ஆறுகள் வளைத்து நிற்க, அதற்கடுத்தாற்போல் காட்டரண்களும் இருந்திருக்கின்றன. இவ்வாறு இயற்கையான பாதுகாவலுடைமையால் முத்தரைய மன்னர்கள் காலத்தில் இப்பகுதி தக்கதொரு தலைமையிடமாக அமைக்கப்பட்டு சிறந்ததொரு வீரனாலும் காக்கப்பட்டிருக்கவேண்டும். இக்கருத்தை, சிறந்த முறையில் இருந்து அழிந்ததற்குரிய சின்னங்களோடு விளங்கும் இராசாமேடு, கோட்டைக்கரை, கீழக்காவலூர் என்ற பெயர்களோடு விளங்கும் தரிசுப் பகுதிகளால் அரிய வியலு

* இவ்வுருவங்களின் புகைப்படத்தினை இம்மலரில் வெளியிட்டுள்ளோம்.

கின்றது. இன்றுள்ள ஊரைச் சார்ந்துள்ளதும், புன்செய் நிலமாக்கப்பட்டுள்ளதுமாய இராசாமேட்டுப் பகுதியை அகழ்ந்தபோது பத்தடிக்குக் கீழே நல்ல திண்மையான செங்கற் சுவர்களும், கிணறுகளும் காணப்படுகின்றனவாம். அவற்றினின்றும் பெயர்த்தெடுக்கப்பட்ட செங்கற்கள் ஒன்றரை அடி நீளமும் முக்காலடி அகலமும், நான்கு அங்குலம் தடிப்பும் உடைய அளவுள்ளதாக இருக்கின்றன. இத்தகைய வடிவுள்ள செங்கற்கள் இன்று மணல் மேடாகக் கிடக்கும் பூம்புகாரின் எஞ்சிய பகுதியினுள் கிடைக்கின்றன என்பதை ஆய்வாளர் நன்கறிவர்.

தமிழகத்தின் தொன்மையை விளக்கிக்காட்டும் சின்னங்களுள் முதுமக்கள் தாழிகளும் ஒன்றும். இவ்வூரின் மேற்கு எல்லையாகப் பிரிந்துவரும் கிளை வெட்டாற்றின் கீழ்க் கரையிலும், தென் எல்லையாக ஓடும் நேர் வெட்டாற்றின் வட கரையிலும், முதுமக்கள் தாழிகள் பல கிடைக்கின்றன. மற்றும் இப்பொழுதுள்ள ஊரின் ஒருபுறத்தில் மனைகோல அடிப்படை அகழ்ந்தபோது ஆங்கு பல தாழிகளும் நன்னிலையில் உள்ளதொரு உறைக்கிணறும் பதினைந்தடிகட்குக் கீழிருக்கக் கண்டுள்ளனர். இத் தாழிகளுக்குள் சிதைந்து நீருகக் கிடக்கும் எலும்புகளோடு சிறு கலயமொன்றும் இருந்ததாக எடுத்தவர்கள் கூறக்கேட்டறிந்தேன். இத்தகைய தாழிகள் நமது தமிழக வரலாற்றுராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும்.

புதிய கல்வெட்டுகள்

இப்பொழுது மக்கள் வாழும் பகுதிக்குக் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது சிவன் கோயிலாகும். இக்கோயிலும் மேற்குமுகமாகவே அமைந்துளது. கோயிலின் ஒரு பகுதியாகத் தெற்கு நோக்கி அமைந்துள்ள உமையின் திருக்கோயில் நுழைவாயில் நிலையாகவுள்ள கருங்கற் சட்டங்களுள், கிழக்குப்புறமுள்ள கல்லில், சென்ற நூற்றுண்டில் எழுந்ததும் சிறியதொரு செய்தியைத் தன்னகத்தே கொண்டதுமாய தமிழ்க் கல்வெட்டொன்று உளது. இக்கல்வெட்டிலேயே இவ்வூர் 'நாகத்தீவு' என்று அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுதிசெய்ய முடிந்தது. இக்கல்வெட்டில், "நந்த ஸு, பங்குனிமீ யிசுஉ இன்னுகதீவின் பங்காக......ஊறார் பண பத்து" என்னும் செய்தியும், நாகத்தீவு என்னும் பெயரும் வந்துளது. கல்வெட்டு மிகப் பிற்பட்ட காலத்ததாயினும் இயற்கைச் சூழலின் காரணமாக உண்டான இவ்வூரின் உண்மைப் பெயர் கூறப்பட்டுளது. இப்பொழுது அப்பெயரின் முழு வடிவு குறைந்து "நாகத்தீ"(வு) என்ற அளவில் கூறப்படுகிறது என்பதும் இதனுல் தெளிவாம்.

மற்றெருரு செய்தியும் ஈண்டுக் கூற விழைகின்றேன். 21-12-58ல் யான் இக்கோயிலுக்குச் சென்றபோது ஐந்தடி உயரமுள்ள உமையின் திருமேனியிலுள்ள சிற்ப நுட்பங்களைக் காண நேர்ந்தது. அத்திருமேனி திருமகளுடையதாக இருப்பதைக் கண்டு, இச்சிலை

புதியதென்றும், ஆதியில் கோயிலில் அமைக்கப்பட்ட உமையின் சிலை ஏதாவது பின்னமடைந்ததின் காரணமாக மறைக்கப்பட்டிருக்கலாமென்றும் கூறினேன். காகதாளியமாக என் சொற்படி மூன்றும் நாள் 23—12—58ல் கோயிலுக்கு அருகே புதையுண்டிருந்த உமையின் திருவுருவம் கிடைத்திருக்கிறது. நான்கடிக்கு மேல் உயரமுள்ளதாக, நின்ற கோலத்தில் உள்ள இச்சிலை 'நாராயணி' என்று பெயரிடப்பெறும் சிற்ப இலக்கணமுடையதாக இருக்கிறது. அதன் முகத்தில் சில சிதிலங்கள் ஏற்பட்டதன் காரணமாகவே இச்சிலை எழுந்தருளி நின்ற இடத்தில் வேறு திருவுருவம் அமைத்திருக்கிறார்கள்.

மற்றொரு கல்வெட்டு தஞ்சை நாயக்கரது வரலாற்றுச் சுவடுகளோடு கூடிய தெலுங்கு மொழியில் உள்ள கல்வெட்டாகும். இது, ஐயனர் கோயில் கருவறை வாயிலின் மேல்தளத்தில் உள்ள இரண்டு கற்சட்டங்களுள் உள்ளடங்கிய சட்டத்திலுள்ளதாகும். இருளடைந்த இடத்திலுள்ள இக்கல்வெட்டை மிக முயன்றே கண்டேன். நான்கு பட்டையாக நான்கடி நீளமுள்ள இக்கல்லின் மூன்று முகப்புக்களில் எழுத்துக்கள் வரிவரியாக வெட்டப்பட்டுள்ளனவாயினும் எழுத்துள்ள ஒரு பகுதி சுவருள் பொருத்தப்பட்டதாகச் சாந்திடப்பட்டுள்ளது. இவ்வாறு கல்வெட்டுள்ள கல், பயன்படுத்தப்பட்டுள்ளதிலிருந்து இக்கோயில் அடிப்படை தவிர மேல் நிலைகளும், விமானமும் பிற்காலத்தில் புதிதாக எடுக்கப்பட்டுளவென்பது நன்கு விளங்குகிறது.

இக்கோயில், மகாமண்டபம், முகமண்டபம், கருவறை என்ற அங்கங்களோடு அறுபதடியளவில் நீண்டு அமைந்துளது. முன்னுள்ள மகா மண்டபத்திற்கு மூன்று புறமும் வாயில்கள் உள்ளன. இம்மண்டபமும், மற்றைய பகுதிகளும் சிதைவுபட்டும் புதரடைந்தும் காணப்படுகின்றன. கருவறை மட்டும் இருட்டறையாகவே காட்சியளிக்கிறது.

ஐயன்கோயிலில் கல்வெட்டுள்ள செய்தி அவ்வூரிலுள்ள முதியவருக்கும் வியப்பாகவே இருந்தது. பின்னர் மும்முறை முயன்று அக்கல்வெட்டை மைப்படியெடுத்தும் கைப்படியெடுத்தும் படித்தறிந்தபோது, தஞ்சை நாயக்கர் கால வரலாற்றுச் செய்திகள் கிடைத்தன. கல்வெட்டு முழுவதையும் பின்னர் வெளியிடவேண்டியிருப்பதால் குறித்த பகுதியை மட்டும் ஈண்டு குறிப்பிடுகிறேன்.

"பூதான தர்ம சாஸநம்"......புத்ருடு......சினசேவப்ப நாயனிங்கார்லு, பாரத்வாஜ கோத்ரம், ஆச்வலாயன சூத்ரம்........"
சின்ன சேவப்பநாயகர் என்பவரால் இவ்வையன்கோயிலுக்குச் சில நிலங்கள் இறையிலி செய்யப்பெற்றமையே இச்சாசனம் கூறுகின்றது.

இவ்வாறு இன்று நாகத்தி என்று குறைத்து அழைக்கப்படும் நாகத்தீவானது முத்தரையர்கள் காலத்தில் மிகச் சிறந்த காவற்

பழந்தமிழர் நம்பிக்கைகள்.

சாமி. சிதம்பரனுர்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

பண்டைக் காலத்தைவிட இன்று நாம் அறிவுத் துறையிலே முன்னேறியிருக்கின்றோம். பண்டைப் பழக்க வழக்கங்கள் பல வற்றை மூட நம்பிக்கையென்று ஏளனம் செய்கின்றோம். மூட நம்பிக்கைகளை விட்டொழித்தால்தான் முன்னேற முடியும் என்று முழக்கம் செய்கின்றோம். மூட நம்பிக்கைகளை வெறுக்கும் ஆத்திரத்திலே உண்மைக்கு மாறாகக்கூட உரையாடத் தொடங்கிவிடுகின்றோம். இன்று நாம் வெறுக்கும் செய்திகளை பண்டைக் காலத்தில் நம்மிடம் இருந்தவை அல்ல. அந்நியர்களால் நம்மீது சுமத்தப்பட்டவை என்று சொல்லிவிடுகின்றோம். அந்நியரால்தாம் புகுத்தப்பட்டவையோ, அல்லது நம்மிடையே தாம் பிறந்தனவோ, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சில பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் தமிழர் சமுதாயத்தில் கலந்து ஒன்றுபட்டுக்கிடக்கின்றன. அவற்றை அகற்றுவதற்கு எவ்வளவு முயன்றும் இன்னும் முடியவில்லை. அவைகளிற் சிலவற்றைக் காண்போம்.

நாளும் சகுனமும்

"எந்தக் காரியத்தைச் செய்வதற்கும், நல்ல நாள் பார்ப்பது மூட நம்பிக்கை. நாளில் என்ன இருக்கிறது? நட்சத்திரத்தில் என்ன இருக்கிறது? நம்மிடம் அறிவும், திறமையும், உறுதியும் இருந்தால் தொட்ட காரியத்தை வெற்றியுடன் செய்து முடித்து விடலாம்" என்று கூறுகின்றனர். இது உண்மை தான். ஆனால் இப்படிக் கூறுகின்றவர்களிற்கூடச் சிலர், தாம் செய்யும் செயல்களைச் 'சுப முகூர்த்தம்' பார்த்துத் தான் செய்கின்றனர்.

[332-ம்பக்கத் தொடர்ச்சி]

பகுதியாக இருந்ததென்பதும், இன்றுள்ள ஐயன்கோயில் அக் காலத்தில் எழுந்த நினைவுச் சின்னமாக இருந்திருக்கவேண்டுமென் பதும், இன்று திடலாகக் கிடக்கும் பெரும் பகுதியின் அகட்டில் இவ் வூரின் வரலாறு புதைந்துகிடக்கிறதென்பதும், முதுமக்கள் தாழிகள் கிடைப்பதினுலேயே இப்பகுதி வரலாற்றுண்மைபெற்றுள்ளதென் பதும் போதரும்.

இவ்வாறு புதிய கல்வெட்டுகளுடன், வரலாற்றுச் சுவடுடைய பகுதிகளை யான் முயன்று கண்டபின், அதனை நன்கு ஆயவும், அங்குள்ள திடலையும் மேட்டையும் அகழ்ந்து உண்மை காணவும் அவாவுடையேனெனினும், இதனைப் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகம் முயன்று ஆராயின் முத்தரையர் கால சரித்திர உண்மைகள் பல இப்பகுதியில் கிடைக்குமென்பது திண்ணம்.

நல்ல நாள், நல்ல நட்சத்திரம், நல்ல நேரம் இவைகளைப் பிறர் அறியாமல் பார்த்து வைத்துக்கொள்ளுகின்றனர்; குறிப்பிட்ட நேரத்திலே செயலைத் தொடங்குகின்றனர். இதற்குக் காரணம் பரம்பரைப் பண்பைத் தவிர வேறில்லை.

பண்டைத் தமிழர்களிடம் நல்லநாள், கெட்டநாள் பார்க்கும் பழக்கம் இருந்தது.

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை."

என்பது தொல்காப்பியக் களவியல் சூத்திரம். "களவு மணம் நிகழும் காலத்தில் கெட்ட ராசியிலும் கெட்ட நாளிலும் காதலி யுடன் சேராமல் இருக்கும் வழக்கம் தலைவனிடம் இல்லை", என்பது இதன் பொருள்.

கற்புமணம் புரிந்துகொண்டவர்கள் கெட்ட ராசியிலும், கெட்ட நாளிலும் கூடிக் களிக்கமாட்டார்கள். களவு மணத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் இந்த வழக்கத்தைப் பின்பற்ற மாட்டான்.

"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்" என்பது தொல்காப்பியப் புறத்திணை இயல் சூத்திரம். 'நாளாலும், பறவை களாலும், வேறு பொருள்களாலும் தோன்றும் காரணங்களும்' என்பது இதன் பொருள்.

மேலே காட்டிய இரண்டு சூத்திரங்களும், தமிழர்களின் பழைய நாகரிகத்தை உணர்த்தின.

நல்லராசி, கெட்டராசி பார்த்தல் தமிழர்களின் வழக்கம்; நல்ல நாள், கெட்ட நாள் பார்த்தல் பழந்தமிழர் வழக்கம். பறவைச் சகுனம் பார்த்தலும், வேறு பல அடையாளங்களைக் கொண்டு நன்மை, தீமைகளைத் தீர்மானிப்பதும் தமிழர்களின் பழக்கம். இந்த உண்மையை மேலே காட்டிய சூத்திரங்களால் அறியலாம்.

நல்ல நாள், கெட்ட நாள் பார்ப்பதும், பறவைச் சகுனம் பார்ப்பதும் தமிழர்களின் பழக்கம் என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றும் தெளிவுறுத்துகின்றது.

"நாள்அன்று போகிப், புள்இடை தட்பப்
பதன் அன்று புக்குத் திறன்அன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர், நெறிகொளப்
பாடுஆன்று இரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடியோரே. [புறம் 124]

'ஒழுங்காக ஓசைநிறைந்து விழுகின்ற அருவியையுடைய பெருமை நிறைந்த மலையின் தலைவனாகிய மலையமான் திருமுடிக் காரியைப் புகழ்ந்து பாடிச் சென்ற புலவர்கள் பரிசு பெறுவது உறுதி; நல்ல நாள் அல்லாத கெட்ட நாளிலே அவனிடம் சென்றாலும் சரி, போகாதே என்று பறவை தடுக்கின்றபோது சென்றாலும் சரி, காலம் அல்லாக் காலத்திலே போனாலும் சரி, தகுதியற்ற சொற்களை அவனிடம் கூறினாலும் சரி, வெறுங் கையுடன் திரும்ப மாட்டார்கள்; பரிசில் பெற்றுத்தான் திரும்புவார்கள்'.

இந்தப் புறநானூற்றுப் பாட்டும் நாள் பார்க்கும் வழக்கமும், சகுனம் பார்க்கும் வழக்கமும் தமிழரிடம் இருந்தன என்பதை அறிவித்தது.

பல்லி சொல்லுக்குப் பலன்

நாம் ஒரு காரியத்திற்குப் புறப்படும்போது, பல்லி கத்தினால் தயங்குகின்றோம். நாம் செல்லும் செயலைக் குறித்துத் தான் அந்தப் பல்லி ஏதோ சொல்லியதாக எண்ணுகின்றோம். நாம் சும்மா இருக்கும்போது பல்லி சொன்னாற்கூட அதற்கு ஏதோ பலன் உண்டு என்று எண்ணுகிறோம். பல்லி சொன்னால் தரையில் மூன்று முறை விரலால் தட்டும் பழக்கம் இன்னும் சிலரிடம் இருப்பதைப் பார்க்கலாம். பல்லி சொல்லை நம்புவதும் நமது பரம்பரைப் பழக்கந்தான்.

"முதைச் சுவல் கலித்த மூரிச் செந்தினை
ஓங்கு வணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடுஓர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி" [அகம் 88]

'உச்சியிலே செழித்து முற்றியிருக்கும் நல்ல தினையின் உயர்ந்து வளைந்த பெரிய கதிரை உண்ணும் பொருட்டு, பிளந்த வாயை யுடைய பல்லியின் சொல்லை அறிந்து, நல்ல நிமித்தம் என்று எண்ணி இளம்பன்றி வருகின்றது'.

"மையல் கொண்ட மதன்அழி இருக்கையள்
பகுவாய்ப் பல்லிப் படுதொறும் பரவி
நல்ல கூறுஎன நடுங்கி".

'காதல் மிகுதியால், வலிமையற்றிருப்பவள், பிளந்த வாயையுடைய பல்லி சொல்லும் போதெல்லாம் வணங்கினாள்; நல்லது சொல் என்று நடுங்கி வேண்டினாள்'.

இந்த அகநானூற்றுப் பாடல்கள், பல்லி சொல்வதற்குப் பலன் உண்டென்று தமிழ் மக்கள் நம்பி வந்தனர் என்பதை உணர்த்தின.

"பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன
நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே".

என்பது கலித்தொகை (11). 'பல்லியும், நல்ல இடத்திலே அவர் வருகைக்கு ஏற்றவாறு கூறின' என்பதனால் பல்லி சொல்வதற்குப் பலன் உண்டு என்பதை உணர்த்திற்று.

"நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே" என்பதனால் மற்றொரு நம்பிக்கையும் அறிவித்தது. பெண்களுக்கு இடது கண், இடது தோள் துடித்தால் நன்மையுண்டு; வலது கண், வலது தோள் துடித்தால் தீமைவரும்; ஆண்களுக்கு வலது கண். வலது தோள் துடித்தால் நன்மையும், வெற்றியும் வரும், இடது கண், இடது தோள் துடித்தால் தீமையுண்டாகும். இத்தகைய நம்பிக்கையும் தமிழரிடம் இருந்தது என்ற உண்மையை இக்கலித்தொகை காட்டுகின்றது.

தெய்வ வாக்கு

நாம் ஏதேனும் ஒரு காரியத்தைப்பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்போது எங்கேயாவது இருந்து மணியோசை கேட்டால் போதும்; உடனே அந்தக் காரியத்திற்கு வெற்றி யென்று சொல்லிக் கொள்ளுகிறோம். தெருவோடு பேசிக் கொண்டு போகின்றவர்கள், தங்கள் பேச்சிலே 'இனிமேல் கவலை வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டு போனால், அல்லது 'எல்லாம் நன்மையாகவே முடியும்' என்று சொல்லிக்கொண்டு போனால், அல்லது 'நிச்சயம் முடிந்துவிடும்' என்று சொல்லிக் கொண்டுபோனால், அச்சொற்களை நாம் பேசிக்கொண்டிருக்கும் காரியத்தைக் குறித்துக் கூறியதாக நினைத்துக் கொள்ளுகிறோம். நாம் கண்ணால் காணாமல், காதால் கேட்ட இத்தகைய சொற்களை அசரீரி என்னும் தெய்வ வாக்காக நினைக்கிறோம். இதுவும் தமிழர்களின் பரம்பரைப் பண்புதான்.

'பசு நிரையைக் கவர்தற்குச் சென்ற வீரர்கள், தாங்கள் சென்றிருக்கும் இடத்திலே, இரவிலே நல்ல பறவையின் ஒலியைக் கேட்டாலும், இடை வழியிலே நடந்து செல்வோர் பேசிக் கொள்ளும் நல்ல சொற்களைக் கேட்டாலும் அவற்றை நல்ல சகுனமாகக் கொள்ளுவார்கள்' இவ்வாறு தொல்காப்பியப் புறத்திணை இயலின் 58-வது சூத்திரத்தில் கூறப்படுகின்றது. இதற்கு விரிச்சி என்று பெயர்.

இது போன்ற ஒரு நற்செய்தி நற்றிணையின் 65வது செய்யுளில் காணப்படுகின்றது.

தலைவன், தலைவியை விட்டுப் பிரிந்து சென்றான். அவன் வருவதாகச் சொல்லிப்போன பருவம் வந்தும் அவன் வரவில்லை.

அதனால் தலைவி வருந்தியிருந்தாள். அப்பொழுது தோழி தலைவியைப் பார்த்துக் கூறுகின்றாள். 'நமது பக்கத்து வீட்டு மாது, வேறொருத்தியிடம் உரையாடும்போது 'அவன் இப்பொழுதே வருவான்' என்று கூறினாள். இது உண்மையாகவே முடியும். ஆதலால் அவள் அமுதம் உண்பாளாக' என்றாள் தோழி. அயலாள் கூறியதை அசரீரியின் சொல்லாக எண்ணிக் கொண்டாள் தோழி.

தொல்காப்பியத்திலும், நற்றிணையிலும் காணப்படும் இச்செய்திகள் பழமையானவை. இவைகளே இன்றும் நம்மை, மணி ஓசையையும், பிறர்பேச்சையும், கழுதை கத்துவதையுங்கூட, நன்னிமித்தம் என்று நம்பும்படிச் செய்வதற்குக் காரணமாகும்.

உடன்கட்டை ஏறுதல்

உடன்கட்டை ஏறும் பழக்கம் இன்று சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுவிட்டது. கணவன் இறந்தால் மனைவியும் அவனுடன் பிணத் தீயிலே மூழ்கி இறந்துவிடுவதே உடன்கட்டையேறுவதாகும். கணவன் இறந்தபின்னும் உயிர்வாழ விரும்பிய பெண்களைக் கட்டாயமாகக் கணவனுடன் வைத்துக் கொளுத்தி வரத் தொடங்கினர். இத்தகைய கொடுமையைப் போக்கவே உடன்கட்டை ஏறும் வழக்கம் தடுக்கப்பட்டது. உடன்கட்டை ஏறும் வழக்கமும், உடன்கட்டை ஏற்றுங் கொடுமையும் பாரத நாடு முழுவதிலும் பரவியிருந்த வழக்கமாகும். தமிழர்களிடமும் இவ்வழக்கம் தொன்றுதொட்டே இருந்துவந்திருக்கின்றது.

> நல்லோள் கணவனொடு நளிஅழல்புகீஇச்
> சொல் இடை யிட்ட பாலை நிலையும்

என்பது தொல்காப்பியப் புறத்திணை இயல் சூத்திரம். 'கற்புள்ள மனைவி தன் கணவனுடன் உடன்கட்டை ஏறப்போகும்போது, அதை வேண்டாம் என்று தடுப்பவருடன் எதிர்த்துக் கூறிய பாலை நிலையும்' என்பது இதன் பொருள்.

உடன் கட்டை ஏறுகின்றவளைச் சிலர் தடுக்கின்றனர். உடன்கட்டை ஏறவேண்டாம் என்பதற்குத் தடுப்போர் கூறும் காரணங்களை அவள் ஒப்புக்கொள்ளாமல் எதிர்த்துப்பேசுகின்றாள். இதனைப் பாலைநிலை என்று கூறுகின்றது தொல்காப்பியம்.

இறந்த கணவனுடன், ஈமத்தீயில் பாய்ந்து மாண்ட பத்தினிப் பெண்ணின் வரலாறு ஒன்றைப் புறநானூறு எடுத்துரைக்கின்றது. பூதப்பாண்டியன் என்பவன் இறந்தான்; அவன்

மனைவி பெருங்கோப் பெண்டு, அவனுடன் தீயில் புகுவதற்குப் போனாள். அப்பொழுது சிலர் தடுத்துக் கூறினர். அவர்களுக்கு அவள் கூறிய எதிர் மொழியாக அமைந்திருக்கின்றது அப் புறநானூற்றுப் பாட்டு.

'வேளை வெந்தை வல்சி யாகப்,
பரல்பெய் பள்ளிப் பாய்இன்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம்; மாதோ !
பெருங்காட்டுப் பண்ணிய கரும்கோட்டு ஈமம்
நுமக்கு அரிது ஆகுகதில்ல; எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தஎன, அரும்புஅற
வள் இதழ் அவிழ்ந்த தாமரை
நள்இரும் பொய்கையும், தீயும் ஓர்அற்றே'

என்பது புறநானூற்றின் 246-வது பாட்டு.

'வெள் எள்ளும், புளியும் சேர்த்துச் சமைத்த வேளைக்கீரையை உணவாகக் கொண்டு, கூழாங்கற்கள் உள்ள கட்டாந்தரையிலே பாயில்லாமல் படுத்துக் கைம்மைநோன்பு நோற்று வருந்தும் பெண்டிர் கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்லம் யாம். பெரிய சுடு காட்டிலே அடுக்கப்பட்டிருக்கும் கரிய விறகால் ஆகிய ஈமத்தீ உங்களுக்குத் துன்பமாகத் தோன்றுக; எமக்கு, எமது பெரிய தோளையுடைய கணவன் இறந்தவுடன், தாமரைகள் பூத்த குளிர்ந்த தடாகமும், நெருப்பும் ஒன்றுதான்' என்பதே இதன் பொருள்.

இதனால், தாமரைப் பொய்கையில் நீராட இறங்குவது போலக் கணவனுடன், தீயில் மூழ்குவர் பத்தினிப் பெண்டிர், என்பதைக் காணலாம்.

பத்தினிப் பெண்டிரின் இயல்பைப் பற்றி மணிமேகலையில் தெளிவாகக் கூறப்படுகின்றது.

'பத்தினிப் பெண்டிர், தங்கள் காதலர் இறந்துவிட்டால், உலையில் உள்ள நெருப்பை ஊதிப் பற்றவைக்கின்ற துருத்தியைப் போலப் பெருமூச்சுவிடுவர். அந்த மூச்சிலேயே அவர்கள் உயிரை விட்டுவிடுவார்கள். இது தலைசிறந்த பத்தினிப்பெண்டிர் தன்மை. இப்படி உயிர்விடாதவர்கள், குளிர்ந்த நீரில் இறங்கு வதுபோலக் கணவனுடன் ஈமத்தீயில் மூழ்கி இறப்பர். இப்படியும் இறக்காவிட்டால், தம் காதலருடன் அடுத்த பிறப்பிலே ஒன்றாக வாழும் வாழ்வை எண்ணிக் கைம்மை நோன்பு நோற்று உயிர் வாழ்வர்' என்று கூறுகிறது மணிமேகலை. இதனை

காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி
ஊது உலைக் குருகின் உயிர்த்து, அகத்து அடங்காது
இன்உயிர் ஈவர்; ஈயார் ஆயின்,
நல்நீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;
நளிஎரி புகாஅர் ஆயின், அன்பரோடு
உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர்;
பத்தினிப் பெண்டிர் பரப்பு நீர் ஞாலத்து

என்று ஊர் அலர் உரைத்தகாதையில்வரும் அடிகளாற் காணலாம்.

காதலன் இறந்தபின் பெருமூச்சு விட்டு உயிர்விட்ட நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி, கோப்பெருந்தேவியின் இறப்பு இத்தகையதே.

மேலே காட்டியவைகளைக்கொண்டு, காதலன் இறந்த துயரம் தாங்கமுடியாது காதலி இறக்கும் தன்மையைக் குறிப்பதே உடன்கட்டை ஏறுதல் என்பதாகும்.

காதலன் இறந்த துயர் தாங்காமல் உயிர்விடும் பெண்களைப் பற்றி இன்றும் கேள்விப்படுகிறோம். இத்தகையவர்கள் உலகம் எங்கும் உள்ளனர். கணவன் இறந்த துயர் தாங்காமல் மனைவி யிறந்த நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளிலே படித்திருக்கின்றோம். இத்தகைய இயல்பு, இன்ன இனத்தினர்க்குத்தான் உரியது என்று கூறமுடியாது. எல்லா நாட்டிலும் எல்லா இனத்தினரிடமும் இத்தகைய நிகழ்ச்சி அரிதாக நடைபெறுவது உண்டு. பழந்தமிழர்களும் இதற்கு விலக்கல்லர்.

பண்டிகைகள் :

குறிப்பிட்ட சில நாட்களைப் பண்டிகைகளாக—பெருநாட்களாக — சிறந்த நாட்களாகக் கொண்டாடும் வழக்கம் எல்லா நாட்டிலும் உண்டு; எல்லா இன மக்களிடமும் உண்டு; எல்லா மதத்தினரிடமும் உண்டு. பொருள் வசதி படைத்த குடும்பத்தினர் இத்தகைய நாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்; மனைவி, மக்களுடன், உற்றார் உறவினருடன் கூடிக் குதூகலிக்கின்றனர். "பண்டிகைகள் மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றியவை; ஆதலால் அவைகள் ஒழிக்கப்பட வேண்டும்" என்று கூறுவோர் உண்டு. இவர்கள் எவ்வளவுதான் பண்டிகைகளைப்பற்றி எதிர்த்துக் கூறினாலும் அவைகள் மறைந்து விடவில்லை. பழங்காலத்துப் பண்டிகைகள் பலவற்றை மக்கள் இன்னும் கொண்டாடிக்கொண்டுதான் வருகின்றனர்.

பழங்காலத்துத் தமிழ் மக்கள் கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடினர். கார்த்திகை நாளிலே வீதியிலே விளக்கேற்றி வைப்பார்கள். மலர்மாலைகளைத் தொங்கவிடுவார்கள். பலரும் கூடிப்பார்த்து மகிழ்ச்சியடைவார்கள்.

குறுமுயல் மறுநிறம் கிளரமதி நிறைந்து,
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்,
மறுகு விளக்கு உறுத்து, மாலைதூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவு. (அகம். 141)

என்பது அகநானூற்றுப் பாட்டு. இதில் கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடிய முறை காணப்படுகின்றது. "சிறிய முயலாகிய களங்கம் தன் மார்பிலே விளங்கும்படி முழுமதி தோன்றும். உரோகிணி சந்திரனுடன் சேர்ந்திருக்கும். இத்தகைய கார்த்திகை நாள் இரவில் வீதியிலே விளக்கேற்றி வைப்பர்; மலர்மாலைகளைத் தொங்கவிடுவர்; பழமையான சிறந்த ஊர்களிலே மக்கள் பலரும் கூடி விழாக் கொண்டாடுவர்" என்பதே இவ்வரிகளில் அமைந்திருக்கும் பொருளாகும். இதனால் பண்டைத் தமிழ் மக்கள் கார்த்திகை விழாக் கொண்டாடியதை அறியலாம்.

தைநீராடுதல் என்னும் பண்டிகையையும் பண்டைத் தமிழ் மக்கள் கொண்டாடி வந்தனர். பெண்கள் நோன்பிருந்து தைம் மாத முதலில் நீராடுவர். இதற்குத்தான் தைந்நீராடல் என்று பெயர்.

தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள்

என்பது நற்றிணையின் 80-வது பாடல் பகுதி. 'தைமாதத்தின் முதல் நாளிலே குளிர்ந்த நீர் நிறைந்த குளத்திலே, நோன்புடன் நீராடும், பெரிய தோள்களையுடைய இளம்பெண்" என்பதே இதன் பொருள்.

தைந்நீராடும் வழக்கம், கலித்தொகையிலும் காணப்படுகின்றது.

'தையின் நீராடிய தவந்தலைப் படுவாயோ'

என்பது கலித்தொகை 59வது பாடலில் காணப்படுவது.

பெண்கள் தாம் விரும்பும் நல்ல கணவனைப் பெறுவதற்காக மன்மதனை வேண்டிக்கொள்வதே தைம்மாத நோன்பாகும் என்று திவ்யப் பிரபந்தம் நாச்சியார் திருமொழியில் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் ஓணத்திருநாள் கொண்டாடப்பட்டு வந்தது. இன்று மலையாளத்து மக்கள்தாம் இப்பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

ஓணவிழா, கார்த்திகை விளக்குத் திருநாள், திருவாதிரை நாள், தைப்பூசநாள், பங்குனி உத்திரநாள், அட்டமித் திருநாள் இவைகளையெல்லாம் தமிழர்கள் கொண்டாடி வந்தனர்; தமிழகத்தில் இத்திருநாட்கள் கொண்டாடப்பட்டு வந்தன. இவ்வுண்மையைத் திருஞானசம்பந்தர் தேவாரத்திலே, திருமயிலாப்பூர்—பூம்பாவைத் திருப்பதிகத்திலே காணலாம். திவ்யப் பிரபந்தப்

பாடல்களிலும் ஓணம், பங்குனி முதலிய திருநாட்கள் காணப்படுகின்றன.

பண்டிகைகள் கொண்டாடும் முறையிலே மாறுதல் ஏற்பட்டிருக்கலாம். பண்டைக் காலத்தில் பண்டிகைகளைக் கொண்டாடிய முறைக்கும், இக்காலத்தில் கொண்டாடும் முறைக்கும் வேற்றுமை இருக்கலாம். நாளடைவில் இத்தகைய மாறுபாடு ஏற்படுவது இயற்கை.

பரம்பரை நம்பிக்கைகள்

பண்டைத் தமிழர்கள் மந்திரங்களிலே நம்பிக்கை வைத்திருந்தனர். பெரியோர்கள் சொல்லிய, பொருள் தெரியாத மொழிகளையே அவர்கள் மந்திரங்கள் என்று நம்பிவந்தனர். இன்னும் குறிகேட்டல், நோய் நீங்கத் தெய்வத்தை வேண்டிக்கொள்ளுதல், பழைய மரங்களிலே தெய்வம் வசிப்பதாக நம்புதல் போன்ற பல நம்பிக்கைகளும் தமிழ் மக்களிடம் இருந்து வந்தன.

ஒரு காரியத்தைச் செய்வதற்கு நாள் பார்த்தல், நேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல், குறி கேட்டல் போன்றவைகளையெல்லாம் மூட நம்பிக்கைகள் என்றே பண்டைய அறிஞர்களும் கருதினர். இதனை

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்ற திருக்குறளால் அறியலாம். "காரியங்களைச் செய்ய எண்ணியவர், உறுதியுள்ளவராயிருப்பாராயின், அவர்கள் தாம் எண்ணிய எல்லாவற்றையும், எண்ணியபடியே அடைவார்கள்" என்ற பொருளமைந்த இக்குறள் மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும்.

இவ்வாறு முன்னோர்கள் மூட நம்பிக்கைகளைக் கண்டித்துங்கூட அவைகள் இன்னும் நம்மிடையே பலப்பல உருவங்களில் இருந்துகொண்டுதான் வருகின்றன. ஆயிரங்காலத்துப் பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் அரை நாளிலே ஒரு நாளிலே ஒழித்துவிட முடியாது. இடைக்காலத்திலே நம்மிடம் ஏற்பட்ட பழக்க வழக்கங்களை எளிதில் மாற்றிக்கொண்டுவிடலாம். பரம்பரையாக நம்மிடம் ஊறிவந்த பழக்க வழக்கங்களைத்தான் எளிதில் மாற்றிவிட முடியாது. நாளடைவில் சிறுகச் சிறுகத்தான் அவைகள் மாறும். ஆதலால் நமக்குப் பிடிக்காத பழக்க வழக்கங்கள் எல்லாம் பிறரால் நம்மீது சுமத்தப்பட்டன என்று கூறுவதில் பயன் இல்லை. இக்காரணத்தைக்காட்டிப் பிறரை வெறுப்பதும் முறையன்று. நமது குற்றங்களை, நம்முடையதுதான் என்று ஒப்புக்கொண்டால்தான், நாம் அவைகளை எளிதிலே திருத்திக் கொள்ள முடியும்.

தமிழரசி தாலாட்டு.

வித்துவான். சொ. சிங்காரவேலனர்,
தருமையா தீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்.

உயிர்க்குயிராஞ் செந்தமிழே! உள்ளமெனுங் கோயில்தனில்
உயிர்க்குயிராய்த் தோய்ந்தின்ப ஊற்றெடுக்கும் ஓவியமே!

செங்கோலாய்த் தீங்குறளைச் செங்கைதனி லேபிடித்து
மங்காமற் காவியத்தின் மாண்புகமழ் பெண்ணரசி!

தமிழரசி! வாழ்வளிக்கும் தண்ணிலவே! உண்ணிறையும்
தமிழொளியே! தாயே! எம் தனித்துணையே! செந்தேனே!

கண்கள்தமை விழித்திரையாற் கவின்சேர்க்க மூடியிவண்
எண்ணமெலாம் தேனுக இருந்துயில், நீ கொள்ளாயோ?

சிந்தையெனுந் தொட்டிலிலே செம்மையெனு நகைபூட்டி,
வந்தவர்க்கும் அருள்கூட்டி வாழ்வளிப்பாய்; தூங்காயோ?

மேனியெலாம் இலக்கியத்தின் மெருகொளிதான் பெருகிடவே
ஞானியரும் புகழ்பாட ஞாலமிதிற் றுயிலாயோ?

புலவர்மடித் தொட்டிலில்நீ புன்னகையால் தேனூற்றிக்
கலகலவென் றேநகைத்துக் கைகொட்டிக் கிடவாயோ?

உன்னருமைச் சேயரெலாம் ஊமையர்போல் வாய்மூடித்
தென்னகத்தைக் காவாமல் திகைப்பதனைக் கண்டாயோ?

இந்தியெனும் பெண்ணொருத்தி இங்குவர, அன்னவளின்
பிந்தியிவர் சென்றவள்தன் பின்தொடர்தல் கண்டாயோ?

உன்னறிவுச் சோலையிலே உலவாமல், எழுந்துநடை
மன்னரெனத் தாம்முழங்கும் மாமன்னர்க் கண்டாயோ?

எழுத்தாள ரெனத்தம்மை இருநிலந்தான் எடுத்துரைக்க
விழித்துணராப் பான்மையராம் வீணர்சிலர்க் கண்டாயோ?

மொழிநடையைக் கொன்றிடுவார் மூதறிஞர் போல்தம்மை
வழியெல்லாம் பிறர்புகழ வயங்குநரைக் கண்டாயோ?

நகைக்கின்றாய், நல்லமுதே! நகைப்பினுக்குக் காரணமேன்?
திகைக்கின்றேன், தேனூறே! திறவாதே, கண்மூடு!

சிலம்பணிந்த பாவாய்! உன் சிரிப்பதனைக் கண்டுளத்தில்
குலங்கடந்த குறிகடந்த கோதில்நெறி தோன்றுதல்காண்!

உன்னழகைத் திங்கள்தொறும் உரைத்துவரும் 'தமிழ்ப்பொழிலை'த்
தென்னகத்தின் மனைகள்தொறும் தேக்குவம்யாம்; வாழியநீ!

முன்னை நலம் கொண்டுயர்ந்து முத்தமிழர் நன்னாட்டில்
அன்னை நலம் பேணுதற்கே ஆடவர்கள் கூடிநின்றோம்!

சின்னவிழி கள்மூடிச் சிரிப்படக்கித் தொட்டிலிலே,
கன்னல்மொழி!, தூங்காயோ, கண்மணியே! ஆராரோ!

தமிழரசி! ஆராரோ! தண்ணிலவே! தாலேலோ!
தமிழர்உயிர்! ஆராரோ! தண்ணமிழ்தே! தாலேலோ!.

தொல்காப்பியம்

சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

இனிச் சொற்களைப் பற்றிப் பேசும் பகுதியில் பொருள் மயங்கா மயங்கும் எனப் பொருள் கூறலும் பொருந்தாதென்க. பொருள் மயங்கா மயங்கும் என்போர் "வினையிற் றோன்றும் பாலறிகிளவி, பெயரிற்றோன்றும் பாலறிகிளவி" யென்பவற்றிற்கு முறையே வினைச் சொல்லாற் றோன்றும் பாலறியப்படும் பொருளும் பெயர்ச் சொல்லாற் றோன்றும் பாலறியப்படும் பொருளும் எனப் பொருளுரைப்பர்.

சொற்கள் இருதிணை ஐம்பாற் பொருள்களை நிலைக்களமாகக் கொண்டு அவற்றை யுணர்த்தும்போது பெயர்ச் சொற்களெனவும் புடைபெயர்ச்சியோடு கூடிய அப்பொருள்களை நிலைக்களமாகக் கொண்டு அப்பொருள்களை யுணர்த்தலை விடாது புடைபெயர்ச்சியை யுணர்த்தும்போது வினைச்சொற்களெனவும் இருதிணை ஐம்பாற் சொற்களே அவ்விரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனவாதலால் அவ்வைம் பாற்சொற்களும் தம்மொடு மயங்கும் பிறவொடு மயங்கா என்பார் "வினையிற் றோன்றும் பாலறிகிளவியும் பெயரிற்றோன்றும் பாலறிகிளவியும் மயங்கல்கூடா" என்றனரன்றிப் பிறிதில்லை

இக்கருத்துப் புலப்படவே பின்னும் "நிலந்தீ நீர்வளி விசும் போடைந்துங், கலந்த மயக்கமுலகமாதலின், இருதிணை யைம்பாலியனெறி வழாமைத், திரிவில் சொல்லொடு தழால் வேண்டும்". (தொல்-பொருள்-மரபியல்-கூ௯௧) கூறுதலுங் காண்க.

சொல்லதிகாரத்தில் சொல்லாற் புலப்படும் பொருளைக் கூறுகின்றன ரென்பதைக்காட்டினும் பொருளைப்பற்றிய சொல்லைக் கூறுகின்றார் என்றலே பொருந்தும் என்க.

திணையும் பாலுமயங்கற்க என்றவாறும் — திணையறி சொல்லாகக் கருதுமிடத்தும் பாலறிசொல்லாகக் கருதுமிடத்தும் மயங்கல் கூடா என்றபடியாம். "இன்னும்..............கூறப்பட்டதாம்" என்பது மேலும் 'பாலறி சொற்கள் மயங்கல்கூடா' என்பதனாலேயே வினைப்பாலறி சொற்களை நோக்கும்போது அவை திணையையும் உணர்த்துதலோடு காலத்தையும் படர்க்கை யிடத்தையும் உணர்த்துதலானும் அவன் இவன் முதலிய பெயர்ச்சொற்களை நோக்கும் போது அவை திணை பால்களை யுணர்த்துதலோடு படர்க்கையிடத்தை யுமுணர்த்துதலானும் சாத்தன் கொற்றன் என்பன போன்றனவும் மாமரம் என்பன போன்றனவும் ஊர், நாடு, அகம், புறம் என்பன போன்றனவும் காலை, மாலை, பொழுது, நாளை, இன்று என்பனவு மாகிய, பாலறி சொற்களுள் ஒருசாரன எனப்படும் பெயர்ச்சொற்களை நோக்கும்போது அவை முடிக்குஞ் சொல்லாலும் தம்மாலும் திணையையும் பாலையுமுணர்த்துவனவாகக் காணப்படலோடு படர்க்கை யிடத்தையும் உணர்த்துவனவாகக் காணப்படலானும் ஒரு சில காலத்தையுமுணர்த்துவனவாகக் காணப்படலானும் வினைச்

சொற்களுள் ஒருசாரனவாகிய வேறு, இல்லை, உண்டு, வியங்கோள் முதலியனவும் முடியும் சொல்லால் திணை பால்களை யுணர்த்துவனவாகக் காணப்படலோடு *காலம் இடங்களையுமுணர்த்துவனவாகக் காணப்படலானும் அவைகள் அவ்வகையாலு மயங்கற்க என்று கூறியபடியாம். அவ்வாருதலால் அச்சொற்கள் காலத்தாலும் இடத்தாலும் மயங்கல்கூடா என்பதும் இந்நூற்பாவாற் கூறப்பட்டதாம் என்கின்றது.

சாத்தன் கொற்றன் என்பன போன்றன ஆண் என்பதை யுணர்த்தினும் ஆண்பாலை யுணர்த்துகின்றன என அவற்றை நோக்கிற் புலப்படாமையானும் முடிக்குஞ் சொல்லோடுபடுங்காலை அவையின்ன பாலையும் திணையையுமுணர்த்துமெனப் புலப்படலானும் மா மரம் என்பன போன்றன ஒன்றன் பாலிற்கும் பலவின் பாற்கும் பொதுவாக நின்று முடிக்குஞ் சொல்லால் இன்னபாலின எனப் புலப்படலானும் அப்படியே காலை நாடு மாலை முதலியனவும் புலப்படலானும் அவையெல்லாம் பாலறி சொல்லுள் ஒரு சாரன எனப்பட்டன. 'வினைச் சொல்லுள்ளும் வேறு' முதலியன முடியுஞ் சொல்லால் பாலறியப்படுவனவாகப் புலப்படலான் அவையும் பாலறி சொல்லுள் ஒருசாரன எனக் கருதப்பட்டன.

நேரே, முடிக்குஞ் சொல்லும் முடியுஞ் சொல்லுமில்லாமலே பாலைக்காட்டுவனவாய வந்தான், அவன் என்பன போல்வன வினைப் பாலறி சொல் பெயர்ப்பாலறி சொல் எனக் கருதப்பட்டன.

இக்கருத்து, சேனாவரையர்க்குண்டென்பது "அவன் வந்தான் அவள் வந்தாள் அவர் வந்தார் அது வந்தது அவை வந்தன நெருநல வந்தான்" எனக்காட்டும் காட்டுக்களாற் புலப்படுகின்றதென்க.

"சிறப்புடைப் பொருளை .... கொள்ளப்படும்" என்பது, இந்நூற்பாவிற்கு முன் வந்த நூற்பாக்களில் ஐம்பாலுணர்த்துஞ் சிறப்புடைய படர்க்கை வினையையே வினையெனக் கொள்ளுமாறு கூறி இருப்பதால் இந்நூற்பாவில் வினையென்பதும் படர்க்கை வினையே யாகும் எனவும் வினையென்பது படர்க்கை வினையெனவே பெயர் என்பதும் படர்க்கைப் பெயரே யாகும் எனவுங் கருதிக்கொள்ளற்குச் "சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்" என்பதனை விடனிருத்தலால், சிறவாதனவாகிய தன்மை வினை முன்னிலை வினைகளும் அப்பெயர்களும் தம்பெயர்களுடனும் வினைகளுடனும் மயங்கும் பிறவற்றோடு மயங்கா என்பதும் 'மயங்கல் கூடா' என்பதனாற் கொள்ளுதல் வேண்டும்; பின்னர், '**தன்மைச் சொல்லே**' (தொல்-சொல்-கிளவி-சமிஅ) '**முன்னிலை சுட்டிய**' (தொல்-சொல்-எச்-சாகூமிஉ) எனவரும் நூற்பாக்களால் தன்மை முன்னிலைப் பெயர்களின் வழுவை யமைக்கின்றமையால் என்க. என்கின்றது.

(தொடரும்)

* '**காலம்**' என்பது இறந்தகால முதலியவற்றை; இடமென்பது படர்க்கையிடத்தை. '**சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்**' என்பது யாண்டுள்ளதோ புலப்பட்டிலது. முன் '**ஏற்புழிக்கோடல்**' என ஒரு தொடர் எழுதப்பட்டது அதுவும் யாண்டுள்ளதோ புலப்பட்டிலது.